# செயலாற்றுகை அறிக்கை
# 2021

## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

"சுஹுருபாய",
ஸ்ரீ சுபூதிபுர வீதி,
பத்தரமுல்லை.

வெளியீடு

கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு பிரிவு

CM 036388 - (2021/07) அரசாங்க அச்சுத் திணைக்களம்

## குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் ஆசிச்செய்தி



இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமான பங்களிப்பைச் செய்து வெளிநாட்டு ஒதுக்குகளை அதிகரித்துக்கொள்ள இயலுமான வகையில் நன்மை பயக்கும் வீசா முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்காக குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டமும் அதன் ஒழுங்கு விதிகளும் திருத்தியமைக்கப்பட்ட விசேட வருடமாகிய 2021 ஆம் ஆண்டுக்காக திணைக்களத்தினால் தயாரிக்கப்படும் செயலாற்றுகை அறிக்கைக்கு கட்டுப்பாட்டாளர் நாயகம் என்ற ரீதியில் ஆசிச்செய்தியை வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததை பாக்கியமாகக் கருதுகின்றேன்.

கொவிட் 19 தொற்றுநோய் நிலமையில் அரச துறை மாத்திரமன்றி தனியார் துறையும் ஸ்தம்பிதம் அடைந்திருந்த 2021 ஆம் ஆண்டில் சேவைப் பெறுநர்களுக்காக சேவைகளை வழங்க முடியுமாகியது. அதன் மூலம் எதிர்ப்பார்க்கப்பட்ட இலக்குகளையும் விஞ்சி தேசிய வருமானத்திற்கு 8.66 பில்லியன் ரூபா பங்களிப்பைச் செய்ய முடிந்ததை இங்கு மகிழ்ச்சியுடன் நினைவு கூறுகின்றேன்.

குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைய வெளிநாட்டு முதலீடுகளுக்கான சந்தர்ப்பங்கள் மற்றும் வெளிநாட்டு மாணவர்களுக்கு இந்த நாட்டில் சாதகமான வீசா முறையொன்றை அறிமுகம் செய்தல் அவ்வாறே இரட்டைக் குடியுரிமையை இழந்துள்ள முன்னாள் இலங்கையர்களின் அறிவு மற்றும் பொருளாதார சக்தியை நாட்டுக்குப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு நிரந்தர வதிவிட வீசா முறையொன்றை அறிமுகம் செய்தல் போன்ற மூலோபாயங்களினூடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்ய முடிந்தமை கடந்த வருடம் நாம் பெற்ற வெற்றியாக கருதுகின்றேன். அவ்வாறே, சேவைப் பெறுநர்களுக்கு சேவை வழங்குவதை இலகுபடுத்துவதற்காக கடவுச்சீட்டுக்களை புதுப்பிக்கும் போது இணைய வழியில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முறைமையொன்று அறிமுகம் செய்யப்பட்டதும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய ஆபத்தானவர்கள் நாட்டுக்குள் நுழைவதற்கு முன்னர் அடையாளம் காணும் செயன்முறை விருத்தி செய்யப்பட்டதும் முக்கியமான செயற்பாடுகளாக குறிப்பிட விரும்புகின்றேன்.

புதிய குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஏற்புடைய நடவடிக்கைகளை நிறைவு செய்தல், சர்வதேச தரநியமங்களுக்கு அமைய இலத்திரனியல் கடவுச்சீட்டு ஒன்றினை அறிமுகம் செய்தல், வெளிநாட்டு ஒதுக்குகளை அதிகரிக்க முடியுமான வகையில் புதிய வீசா முறைமையொன்றை அறிமுகம் செய்தல் போன்ற இலக்குகளுடன் 2022 ஆம் ஆண்டில் கால்பதித்துள்ள நாம், எமது நோக்கு, செயற்பணி மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றிக்கொள்ள வழிகாட்டல் வழங்கிய திணைக்களத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரான அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கும் கௌரவ இராஜாங்க அமைச்சருக்கும் அமைச்சின் செயலாளர், ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து அரசாங்க நிறுவனங்களுக்கும் குடிபெயர்வோருக்கான சர்வதேச அமைப்புக்கள் உள்ளிட்ட அனைத்து சர்வதேச நிறுவனங்களுக்கும் தனியார் முகவர் நிறுவனங்களுக்கும் சேவை வசதிகளை வழங்கும் நிறுவனங்களுக்கும் அனைத்து சேவை பெறுநர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்தோடு, விசேடமாக கொறோனா பெருந்தொற்று நிலமையிலும் அவ்வாறே ஆண்டிறுதியில் இயலளவுக்கு மேல் கிடைக்கப்பெற்ற கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் தொடர்பிலும் மிகவும் அர்ப்பணிப்புடன் தொடர்ச்சியாக பொதுமக்களுக்கு சேவை வழங்கிய குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் ஒட்டுமொத்த பணியாட்தொகுதியினரதும் சேவையைப் பாராட்டுவதற்கும் இதனை சந்தர்ப்பமாகக் கருதுகின்றேன்.

**யூ.வீ. சரத் ரூபசிறி**
கட்டுப்பாட்டாளர் நாயகம்
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,
சுஹுருபாய,
பத்தரமுல்லை.

## - உள்ளடக்கம் -


பக்கம்

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விபரம்

1.1 அறிமுகம் 01
1.2 நோக்கு, செயற்பணி, நிறுவனத்தின் குறிக்கோள்கள் 02
1.3 பிரதான பணிகள் 02
1.4 நிறுவனக் கட்டமைப்பு 03
1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் மற்றும் கிளைகள் 04

1.5.1 நிர்வாகப் பிரிவு 05
1.5.1.1 நிர்வாகக் கிளை 05
1.5.1.2 பயிற்சி மற்றும் அபிவிருத்திக் கிளை 05
1.5.1.3 கொள்முதல் கிளை 05
1.5.1.4 உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அலகு 06
1.5.1.5 போக்குவரத்துக் கிளை 06
1.5.1.6 நலன்புரி அலகு 06
1.5.1.7 பொதுமக்கள் தகவல் அலகு 06
1.5.1.8 வரவேற்பு கருமபீடம் 06
1.5.1.9 பியஸ வளாகம் 07

1.5.2 கடவுச் சீட்டுப் பிரிவு 07
1.5.2.1 கடவுச்சீட்டுக் கிளை 07
1.5.2.2 கடவுச்சீட்டு தயாரிப்புக் கிளை 08
1.5.2.3 கடவுச்சீட்டு திருத்தும் கிளை 09
1.5.2.4 வெளிநாட்டு தூதரகக் கிளை 09
1.5.2.5 தபால் கிளை 09
1.5.2.6 பிராந்திய அலுவலகங்கள் 09

1.5.3 கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு பிரிவு 09
1.5.3.1 கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புக் கிளை 10
1.5.3.2 இந்திய இலங்கை பிரஜைகள் கிளை 10
1.5.3.3 சட்டக் கிளை 11

1.5.4 வீசா மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவு 12
1.5.4.1 வீசா கிளை 12
1.5.4.2 துறைமுக மற்றும் விமான நிலையக் கிளை 14
1.5.4.3 புலனாய்வுக் கிளை 16

1.5.5 தகவல் தொழில்நுட்பப் பிரிவு 20
1.5.6 குடியுரிமைப் பிரிவு 21
1.5.7 நிதிப் பிரிவு 21
1.5.8 உள்ளக கணக்காய்வுப் பிரிவு 22

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம் 24

2.1 2021 ஆம் ஆண்டில் அடையப் பெற்ற முன்னேற்றம் 24

2.2 செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் வருமான உழைப்பின் முன்னேற்றம் 55

2.3 விசேட வெற்றிகள் 56

2.4 சவால்கள் 56

2.5 எதிர்கால இலக்குகள் 57

அத்தியாயம் 03 - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை 58

அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டிகள் 77

அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதற்கான செயலாற்றுகை 80

அத்தியாயம் 06 - மனித வள விபரம் 83

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை 92

- பின்னிணைப்பு

பின்னிணைப்பு 01 – கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

# அத்தியாயம் 01 – நிறுவனத்தின் விபரம்

## 1.1 அறிமுகம்

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தினாலும் அதனோடு தொடர்புடைய திருத்தங்கள் மற்றும் 1956 ஆம் ஆண்டின் குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்திற்கு அமைய ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய திருத்தங்களினாலும் குடியுரிமையை வழங்கும் சட்ட ஏற்பாடுகளினாலும் உரித்தாக்கப்பட்டுள்ள சட்டத் தத்துவங்களின் கீழ் இயங்கி வருகின்றது.

தேசியப் பாதுகாப்பை உறுதி செய்த வண்ணம் இலங்கைப் பிரஜைகள் அல்லாதோர் இலங்கைக்குள் உட்பிரவேசிப்பதையும் நாட்டிலிருந்து வெளியேறுவதையும் கட்டுப்படுத்தல், ஒழுங்குமுறைப்படுத்தல், வெளிநாட்டவர்களுக்கு வீசா அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல், வெளிநாட்டில் இலங்கையரின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கைப் பிரஜைகளுக்கு கடவுச்சீட்டுக்களை வழங்குதல், வெளிநாடுகளில் பிறக்கும் இலங்கைப் பிரஜைகளின் பிள்ளைகளுக்கு இந்நாட்டுக் குடியுரிமையை வழங்குதல், இலங்கையின் குடியுரிமைக்காக விண்ணப்பிக்கும் ஆட்களுக்கு இந்நாட்டுக் குடியுரிமையை வழங்குதல் முதலான பிரதான பணிகள் இத்திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்றன. அத்தோடு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சேவைப் பெறுநர்களுக்கு மிகவும் வினைத்திறன்மிக்க நட்புறவுடன் கூடிய சேவையை வழங்குவதற்காக பணியாட் தொகுதியினர் எப்போதும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நாட்டுக்கு வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் பாரிய பணியில் ஈடுபட்டுவரும் திணைக்களமாகும். உலகளாவிய ரீதியில் பரவிவந்த கொவிட் 19 பெருந்தொற்றின் காரணமாக 2021 ஆம் ஆண்டில் நிறுவனத்தினது மொத்த செயலாற்றுகைக்கும் தடையேற்பட்ட போதிலும் மக்களுக்கு அதன் அழுத்தத்தைப் பிரயோகிக்காது மக்களது தேவைகளை பூர்த்திசெய்யும் பொருட்டு தொடர்ச்சியாக திணைக்களத்தினால் சேவைகள் நிறைவேற்றப்பட்டன. விமான நிலைய மற்றும் துறைமுக குடிவரவு, குடியகல்வு கடமைகள் மற்றும் கடவுச்சீட்டு தேவைப்பாடுகளுடன் தொடர்புடைய பணிகள் ஊரடங்கு நிலவிய காலப்பகுதியிலும் நிறைவேற்றப்பட்டன. அதன் பெறுபேறாக 2021 ஆம் ஆண்டில் 8.66 பில்லியன் ரூபா தொகையை தேசிய வருமானத்திற்கு ஈட்டிக்கொடுப்பதற்கு இயலுமாகியது.

## சட்டத் தத்துவங்கள்

- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு.
- 1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க குடியுரிமைச் சட்டமும் அதற்கான திருத்தங்களும்.
- 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர், குடியகல்வோர் சட்டமும் அதற்கான திருத்தங்களும்.
- 1949 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க இந்திய, பாகிஸ்தான் குடியிருப்பாளர்களின் குடியுரிமை தொடர்பான சட்டம்.
- 1956 குடிவருவோர், குடியகல்வோர் ஒழுங்குவிதிகளும் அதற்கான திருத்தங்களும்.
- 1967 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இந்திய – இலங்கை உடன்படிக்கையை நடைமுறைப்படுத்து வதற்கான சட்டமும் அதற்கான திருத்தங்களும்.
- 1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க நாடற்றோருக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்டம்.
- 2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இந்திய வம்சாவளி மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்டம்.
- 2008 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சீன வம்சாவளி மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்டம்.
- மேற்குறிப்பிடப்பட்ட சட்டங்களுடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகளும் கட்டளைகளும்.
- குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகளும் அறிவுறுத்தல்களும்.

## 1.2 நோக்கு, செயற்பணி மற்றும் நிறுவனத்தின் குறிக்கோள்கள்

**நோக்கு**

பிராந்தியத்தில் முன்னோடி குடிவரவு மற்றும் குடியகல்வு சேவையாகத் திகழ்தல்

**செயற்பணி**

தேசியப் பாதுகாப்பையும் சமூக விழுமியங்களையும் பேணிப் பாதுகாத்தல், பொருளாதார அபிவிருத்திற்கான வாய்ப்புகளை வழங்கிய வண்ணம் நாட்டிலிருந்து வெளியேறுவோரையும் நாட்டிற்குள் வருவோரையும் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் பிரஜைகள் சேவைகளை வழங்குதல்.

### குறிக்கோள்கள்

- தேசிய பாதுகாப்பு விடயத்தில் பிரதான தரப்பொன்றாக செயற்படுதல்.
- சர்வதேச தரநியமங்களின் பிரகாரம் பெயர் குறிக்கப்பட்ட இறங்கு துறைகள் ஊடாக சட்ட ரீதியாக நாட்டிற்குள் பிரவேசிப்பதையும் நாட்டிலிருந்து வெளியேறுவதையும் வினைத்திறன்மிக்க வகையில் முகாமை செய்தல்.
- இலங்கையரின் அடையாளத்தை வெளிநாடுகளில் உறுதிப்படுத்தல்.
- சேவை பெறுநர்களுக்கு தரமான மற்றும் வினைத்திறன்மிக்க சேவைகளை வழங்குவதனூடாக அரசாங்கத் துறையில் மிகச் சிறந்த நிறுவனமாகத் திகழ்தல்.

## 1.3 பிரதான பணிகள்

- இலங்கைப் பிரஜைகள் அல்லாதோர் இலங்கைக்குள் உட்பிரவேசிப்பத்தைக் கட்டுப்படுத்தல், இலங்கையிலிருந்து வெளியேறுவதை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் இலங்கைப் பிரஜைகள் அல்லாத விரும்பத்தகாத ஆட்களை இலங்கையிலிருந்து வெளியேற்றுதல்.
- இலங்கைப் பிரஜைகளுக்கு கடவுச்சீட்டுக்களை விநியோகித்தல் மற்றும் வழங்கப்பட்டுள்ள வீசா அனுமதிப் பத்திரங்களின் காலத்தை நீடித்தல்.
- வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு வீசா அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல் மற்றும் வழங்கப்பட்டுள்ள வீசா அனுமதிப்பத்திரங்களின் காலத்தை நீடித்தல்.
- இலங்கைக் குடியுரிமையை வழங்குதல் மற்றும் அதனோடு தொடர்புடைய செயற்பாடுகள்.
- இரட்டைக் குடியுரிமையை வழங்குதல் மற்றும் அதனோடு தொடர்புடைய செயற்பாடுகள்.

## 1.4 நிறுவனக் கட்டமைப்பு



## 1.5 திணைக்களத்தின் கீழ் இயங்கும் பிரதான பிரிவுகளும் கிளைகளும்

**01. நிருவாகப் பிரிவு**

- நிருவாகக் கிளை
- பயிற்சி மற்றும் அபிவிருத்திக் கிளை
- கொள்முதல் கிளை
- உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அலகு
- போக்குவரத்துக் கிளை
- நலன்புரிக் கிளை
- பொதுமக்கள் தகவல் அலகு
- வரவேற்பு கருமபீடம்
- பியஸ வளாகம்

**02. கடவுச் சீட்டுப் பிரிவு**

- கடவுச்சீட்டுக் கிளை
- கடவுச்சீட்டு தயாரிப்புக் கிளை
- கடவுச்சீட்டு திருத்தும் கிளை
- வெளிநாட்டு தூதரகக் கிளை
- தபால் கிளை
- பிராந்திய அலுவலகங்கள்

**03. கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு பிரிவு**

- கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புக் கிளை
- இந்திய இலங்கை பிரஜைகள் கிளை
- சட்டக் கிளை

**04. வீசா மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கிளை**

- வீசா கிளை
- துறைமுக மற்றும் விமான நிலையக் கிளை
- புலனாய்வுக் கிளை

**05. தகவல் தொழில்நுட்பப் பிரிவு**

**06. குடியுரிமைப் பிரிவு**

**07. நிதிப் பிரிவு**

**08. உள்ளக கணக்காய்வுப் பிரிவு**

## 1.5.1 நிருவாகப் பிரிவு

திணைக்களத்தின் பொது நிர்வாகம், மனிதவள மற்றும் பௌதீக வளங்கள் முகாமைத்துவம், அலுவலக முகாமைத்துவம், வாகனப் பராமரிப்பு, பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள், கொள்முதல் நடவடிக்கைகள், திணைக்களத்திற்குரிய பிராந்திய அலுவலகங்கள் மற்றும் ஏனைய பணிகளுடன் தொடர்புடைய காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் என்பன இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே, திணைக்களத்தின் உள்ளக மற்றும் வெளிப் பிரிவுகளுடன் சிறந்த ஒருங்கிணைப்பையும் முகாமைத்துவத்தையும் பேணி வருவதும் நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அப்பணிகள் பின்வரும் கிளைகள் மற்றும் அலகுகள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படு கின்றன. இந்த அனைத்து நடவடிக்கைகளும் கட்டுப்பாட்டாளர் (நிர்வாகம்) அவர்களினால் மேற்பார்வை செய்யப்படுகின்றது.

1. நிருவாகக் கிளை
2. பயிற்சி மற்றும் அபிவிருத்திக் கிளை
3. கொள்முதல் கிளை
4. உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அலகு
5. போக்குவரத்துக் கிளை
6. நலன்புரி அலகு
7. பொதுமக்கள் தகவல் அலகு
8. வரவேற்பு கருமபீடம்
9. பியஸ வளாகம்

### 1.5.1.1. நிருவாகக் கிளை

இந்தப் பிரிவினால் திணைக்களத்தின் பொது நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே, மனிதவள மற்றும் பௌதீகவள முகாமைத்துவம், அலுவலக முகாமைத்துவம் என்பன இப்பிரிவின் கீழ் செயற்படுத்தப்படுகின்றன.

### 1.5.1.2. பயிற்சி மற்றும் அபிவிருத்திக் கிளை

மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தின் எதிர்கால முன்னேற்றத்திற்கு அத்தியவசிய நியதியாக காணப்படுவதோடு, திணைக்களத்தின் மொத்த ஆளணியினருக்கும் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காணல், திட்டமிடல், ஏற்பாடு செய்தல், வழிநடாத்தல் மற்றும் பெறுபேறுகளை மதிப்பீடு செய்தல் என்பன இந்தக்கிளையின் நோக்கங்களாகும். இதனூடாக நீண்டகால நிறுவன நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு உயர் முகாமைத்துவத்தின் வழிகாட்டல்கள், ஆலோசனைகள் மற்றும் முன்மொழிவுகள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

நிறைவேற்றுத்தர, பதவிநிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலை மட்டங்களிலுள்ள உத்தியோகத்தர்களுக்காக 2021 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 24 நடாத்தப்பட்டுள்ளதோடு, உலகளாவிய கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கு உத்தியோகத்தர்கள் அனுப்பப்படவில்லை.

நடாத்தப்பட்ட பயிற்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் பக்கம் 90 – 94 இல் காட்டப்பட்டுள்ளன.

### 1.5.1.3. கொள்முதல் கிளை

திணைக்களத்தின் அனைத்து கொள்முதல் நடவடிக்கைகளும் இந்தக் கிளையினாலேயே நிறைவேற்றப்படுகின்றது. இந்தத் திணைக்களத்திற்கு வருடாந்தம் தேவைப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளை சரியாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையையும் அதனுடன் தொடர்புடைய சட்ட திட்டங்களையும் கடைபிடித்து கொள்முதல் நடவடிக்கைகளை செவ்வனே மேற்கொள்வது இந்தக் கிளையின் பிரதான நோக்கமாகும்.

### 1.5.1.4 உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அலகு

2017 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்தப் பிரிவினால் இந்தத் திணைக்களத்தின் சேவைகளை மேலும் வினைத்திறனுடனும் விளைவுப் பயனுடனும் மேற்கொள்வதற்காக வருடம் பூராகவும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அதன் பெறுபேறாக 2019 – 2021 ஆம் ஆண்டுகளுக்காக நடாத்தப்பட்ட தேசிய உற்பத்தித்திறன் விருதுப் போட்டியில் அந்த வருடத்தின் திணைக்களப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.





### 1.5.1.5 போக்குவரத்துக் கிளை

பிரதான அலுவலகத்தின் மற்றும் நாடு பூராகவும் உள்ள துறைமுகங்கள், விமான நிலையங்களுக்கு மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கு உத்தியோகத்தர்களை கடமைகளில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பது போக்குவரத்துக் கிளையின் பிரதான செயற்பாடாகும். தற்போது திணைக்களம் வசம் 34 வாகனங்கள் உள்ளன.

### 1.5.1.6 நலன்புரி அலகு

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் நலன்புரிச் சங்கத்தினால் அதன் அங்கத்தவர்களினதும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களினதும் அதே போன்று திணைக்களத்தில் சேவையைப் பெற்றுக்கொள்ள வரும் பொதுமக்களினதும் வெளிச் சமூகத்தினதும் நலன்கருதி பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதன் மூலம் உடல் மற்றும் உள ரீதியில் ஆரோக்கியமான மற்றும் திருப்தியுள்ள ஆட்களை உருவாக்குவதன் மூலம் பொதுமக்களுக்கு தரமான சேவையை வழங்குவது நலன்புரிச் சங்கத்தின் நோக்கமாகும்.

### 1.5.1.7 பொது மக்கள் தகவல் அலகு

1962 எனும் தொலைப்பேசி இலக்கத்தின் கீழ் பொதுமக்கள் தகவல் அலகு திணைக்களத்தின் ஐந்தாம் மாடியில் நிறுவப்பட்டுள்ளது. திணைக்களத்தினால் பெற்றுக்கொள்ள முடியுமான சேவைகள் பற்றிய அனைத்து தகவல்களையும் இந்த அலகினால் பெற்றுக்கொள்ள முடியும்.

### 1.5.1.8 வரவேற்பு கருமபீடம்

திணைக்களத்தின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருகைதரும் பொதுமக்கள் இன்முகத்துடன் வரவேற்கப்பட்டு உரிய பிரிவுகளுக்கு ஆற்றுப்படுத்தப்படுவர்.

### 1.5.1.9 பியஸ வளாகம்

சேவையை எதிர்ப்பார்த்து திணைக்களத்திற்கு வருகைதரும் பொதுமக்களுக்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்குதல், விண்ணப்பங்களை ஒப்படைத்தல் மற்றும் ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக தனது சந்தர்ப்பம் வரும் வரையில் தங்கியிருப்பதற்காக பியஸ வளாகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மேலும் கடவுச்சீட்டு மற்றும் வீசாவுக்கான புகைப்படம் எடுத்தல் மற்றும் விண்ணப்பங்களை நிரப்புவதற்கான உதவிச் சேவை, தொடர்பாடல் வசதிகள் மற்றும் உணவக வசதி என்பனவும் அங்கு காணப்படுகின்றன.

## 1.5.2 கடவுச்சீட்டுப் பிரிவு

கட்டுப்பாட்டாளர் (கடவுச்சீட்டு) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்கிவரும் இப்பிரிவானது பொது மக்களுக்கு மிகவும் நெருங்கிய பிரிவாகும். இலங்கையர்களுக்கு தங்கு தடையின்றி வெளிநாடுகளுக்குப் பயணிப்பதற்கும் தங்கியிருப்பதற்கும் திரும்பி வருவதற்கும் ஏற்றவாறு சர்வதேச தரநியமங்களுடன் கூடிய கடவுச்சீட்டு விநியோகிக்கப்படுகின்றது. கடவுச் சீட்டுக்கள் ஒருநாள் சேவை, சாதாரண சேவை என்ற அடிப்படையில் விநியோகிக்கப்படுகின்ற அதே வேளை ஒரு நாள் சேவை பிரதான அலுவலகத்தினால் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றது.

### நோக்கங்களும் செயற்பாடுகளும்

1. சரியான மற்றும் உண்மையான தகவல்கள் அடங்கிய வெளிநாட்டுக் கடவுச்சீட்டை இலங்கையர்களுக்கு வழங்கும் பொருட்டு வழிமுறைகளைப் பின்பற்றுதல்.
2. இலங்கையின் கடவுச்சீட்டினது தரத்தை பாதுகாப்பதற்கும் விருத்திசெய்வதற்கும் ஏற்புடைய கொள்கைகளை அமுல்படுத்தல்.
3. இலங்கையர்களின் குடிவரவு மற்றும் குடியகல்வு நடவடிக்கைகள் தொடர்பிலான நீதிமன்ற உத்தரவுகளை அமுல்படுத்தல்.
4. இலங்கையர்களின் குடிவரவு மற்றும் குடியகல்வு நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய அரச பாதுகாப்புப் பிரிவுகள் மற்றும் அரச நிறுவனங்களுடன் சிறந்த ஒருங்கிணைப்புடன் செயற்படுதல்.

இந்தப் பிரிவின் செயற்பாடுகள் அதன் 5 கிளைகள் ஊடாகவும் பிராந்திய அலுவலகங்கள் 4 ஊடாகவும் செயற்படுத்தப்படுகின்றன. அதாவது,

- கடவுச் சீட்டுக் கிளை
- கடவுச்சீட்டு தயாரிப்புக் கிளை
- கடவுச்சீட்டு திருத்தக் கிளை
- வெளிநாட்டு தூதரகக் கிளை
- தபால் கிளை
- பிராந்திய அலுவலகங்கள் – கண்டி, மாத்தறை, குருநாகல், வவுனியா

### 1.5.2.1 கடவுச் சீட்டுக் கிளை

நாளாந்தம் அதிக எண்ணிக்கையிலான சேவைப் பெறுநர்கள் வருகைத் தரும் கிளை இதுவாகும். ஆயினும் COVID 19 தொற்று நோய்ப் பரவல் காரணமாக நாளாந்தம் சமுகமளிக்கும் சேவைப் பெறுநர்களின் எண்ணிக்கையில் 2021 ஆண்டு முதல் இரண்டு காலாண்டுகளிலும் பாரிய வீழ்ச்சி காணப்பட்டது. ஆயினும் 2021 ஆம் ஆண்டின் ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் எதிர்பாராத அளவு சேவைப் பெறுநர்களின் வருகை அதிகரித்தது. பொதுமக்களுக்கு மிகவும் நெருங்கிய, வினைத்திறன்மிக்க மற்றும் துரித சேவையை வழங்கும் நோக்கில் சாதாரண சேவையின் கீழ் பிராந்திய ரீதியில் கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளவதற்காக கண்டி, மாத்தறை, குருநாகல், வவுனியா ஆகிய பிரதேசங்களில் 04 பிராந்திய அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்தப் பிராந்திய அலுவலகங்கள் 04 பிரதி / உதவிக் கட்டுப்பாட்டாளர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்குகின்றன.

## 2021 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட விசேட செயற்பாடுகள்

- திணைக்களத்தின் சேவைகளை விஸ்தரிக்கும் நோக்கில் புதிய பிராந்திய அலுவலகங்கள் 4 ஐ நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதோடு, இரத்தினபுரி மற்றும் அம்பாறை அலுவலகங்களை ஆரம்பிப்பது தொடர்பில் ஆரம்ப கலந்துரையாடல் நடாத்தப்பட்டுள்ளது.
- விண்ணப்பதாரிகளுக்கு மிகவும் தரமான அவர்களின் உயிர்மானத் தகவல்களை உள்ளடக்கி சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலத்திரனியல் கடவுச்சீட்டை விநியோகிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.
- தற்போது கடவுச்சீட்டுப் பெற்றுக்கொண்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு புதிய கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளும் போது இணைய வழியில் தனது கடவுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.











### 1.5.2.2 கடவுச்சீட்டு தயாரிப்புக் கிளை

கடவுச்சீட்டுக் கிளையிடமிருந்தும் வெளிநாட்டுத் தூதரகக் கிளையிடமிருந்தும் புதிய கடவுச்சீட்டுக்களைத் தயாரிப்பதற்காக இக்கிளைக்கு கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் உரிய பரீட்சித்தல்களுக்கு உட்படுத்தப்பட்டதன் பின் பின்வருமாறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தரவுகளைப் பதிதல் (Data Entry ), அத்தரவுகளை மீண்டும் பரீட்சித்தல் (Validate) , விண்ணப்பதாரியின் புகைப்படத்தையும் கையொப்பத்தையும் வருடி எடுத்தல் (Capture ) , அச்சிடுதல் (Print ) , அச்சிடப்பட்ட கடவுச்சீட்டுகளில் மாற்றங்கள், அவதானிப்புக்கள் இருப்பின் அவற்றை 4 ஆம் பக்கத்தில் அச்சிடுதல் (Observation Print ) , தரக் கட்டுப்பாடு (Quality Assurance ) , கடவுச்சீட்டுகளை லெமினேட்டிங் செய்தல், பரீட்சித்தல், ஒப்பிட்டுப் பார்த்தலும் 4 ஆம் பக்கத்தை வருடி எடுத்தல் (Compare & 4th Page Scan ) , இறுதி தரப் பரிசோதனை (Quality Con-firm ) முதலான கட்டங்களின் பின்னர், ஒருநாள் சேவையின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற கடவுச்சீட்டுக்கள், கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படும் கருமபீடங்களுக்கும் சாதாரண சேவையின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற

கடவுச்சீட்டுக்கள் தபால் கிளைக்கும் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அனுப்ப வேண்டிய கடவுச்சீட்டுக்கள் வெளிநாட்டுத் தூதரகக் கிளைக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக கடவுச்சீட்டு திருத்தங்களுக்காக கடவுச்சீட்டு திருத்தக் கிளையினால் அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்கள் உரிய பரீட்சித்தல்களின் பின்னர் தரவுகளைப் பதிதல் (Data Entry ) , அத்தரவுகளை மீண்டும் பரீட்சித்தல் (Validate ) , திருத்தங்களை 4 ஆம் பக்கத்தில் அச்சிடுதல் (Observation Print ) போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

### 1.5.2.3 கடவுச்சீட்டு திருத்தக் கிளை

விநியோகிக்கப்பட்ட கடவுச்சீட்டுகளில் கடவுச்சீட்டு உரிமையாளர்களினால் பின்னர் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு பல்வேறு வகைகளின் கீழ் கடவுச்சீட்டுகளில் திருத்தங்களை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இந்தக் கிளையினால் முன்னெடுக்கப்படுகின்றன.

### 1.5.2.4 வெளிநாட்டுத் தூதரகக் கிளை

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களுக்கான கடவுச்சீட்டுக்கள் இந்தக் கிளையினால் விநியோகிக்கப்படுகின்றன. குறித்த நாட்டில் அமைந்துள்ள வெளிநாட்டுத் தூதரகத்தினூடாக சமர்ப்பிக்கப்படும் கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு ஊடாக இந்தத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அவ்வாறு அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்களுக்கான புதிய கடவுச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு மீண்டும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டு வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கைத் தூதரங்களூடாக உரிய விண்ணப்பதாரிகளிடம் சேர்ப்பிக்கப்படுகின்றன.

<u>**விசேட செயற்பாடுகள்**</u>

- கடவுச் கொவிட் 19 தொற்று நோய் காரணமாக விமான அஞ்சல் ஊடாக விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுவதில் ஏற்படும் தாமதத்தை தவிர்ப்பதற்காக மின்னஞ்சல் ஊடாக விண்ணப்பங்களை தருவித்து கடவுச் சீட்டுக்களை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.
- இணைய வழியில் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள கணினித் தரவுத் தளமொன்றை தயாரிக்கும் ஆரம்பப் பணிகள் நிறைவடைந்துள்ளன.
- கடவுச்சீட்டு விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஏற்புடைய ஆவணங்களின் அவசியப்பாட்டை மீளாய்வு செய்து அனைத்து தூதுவராலயங்களுக்கும் ஒருமித்து அந்த ஆவணங்களை சமர்ப்பிக்க முடியுமான சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

### 1.5.2.5 தபால் கிளை

சாதாரண சேவையின் கீழ் ஒப்படைக்கப்பட்ட விண்ணப்பங்களுக்குரியதாக தயாரிக்கப்படுகின்ற கடவுச்சீட்டுகளை தாமதமின்றி பதிவுத் தபால் மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பி வைப்பதே இந்தப் பிரிவின் பிரதான பணியாகும்.

### 1.5.2.6 பிராந்திய அலுவலகங்கள்

மாத்தறை, கண்டி, வவுனியா மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள் அமைந்துள்ளதோடு, சாதாரண சேவையின் கீழ் கடவுச்சீட்டு விநியோகம் மற்றும் கடவுச் சீட்டுக்களில் திருத்தங்களை மேற்கொள்ளும் பணிகள் அவற்றின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.
திணைக்களத்தின் பணிகளை மாகாண மட்டத்தில் பரவலாக்கம் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

### 1.5.3 கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புப் பிரிவு

கட்டுப்பாட்டாளர் (கொள்கை, அபிவிருத்தி, மறுசீரமைப்பு) / பிரதி ஆணையாளர் (இந்தியா – இலங்கை) அவர்களின் மேற்பார்வையின் கீழ் கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புக் கிளை, இந்தியா – இலங்கைப் பிரஜைகள் கிளை, சட்டக் கிளை என்பன இயங்கி வருகின்றன.

### 1.5.3.1 கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புக் கிளை

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அபிவிருத்தி மற்றும் கொள்கை வகுப்பு நடவடிக்கைகளை நன்கு திட்டமிட்ட அடிப்படையில் சீராக அமுல் செய்யும் நோக்குடன் இந்தக் கிளை நிறுவப்பட்டுள்ளது.

**<u>நிறைவேற்றப்படும் பிரதான பணிகள்</u>**

1. திணைக்களத்தின் பிரதான பணிகளை நிறைவேற்றுவதுடன் தொடர்புடைய கொள்கைகளை / திட்டங்களை வகுத்தல்.
2. திணைக்களத்திற்குரிய சட்டதிட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளல்.
3. உள்ளக சுற்றறிக்கைகள், நடவடிக்கை முறைகளைத் தயாரித்து வெளியிடுதல், வழிகாட்டல் கையேடுகளைத் தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்தல்.
4. வருடாந்த செயல் திட்டத்தை (Action Plan ) தயாரித்தல் மற்றும் அதை நடைமுறைப்படுத்த ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
5. கடந்த ஆண்டுக்குரிய செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்தல்.
6. ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்ப வேண்டிய மாதாந்த மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் உரிய திகதியில் அந்த நிறுவனங்களுக்கு அனுப்புதல்.
7. நிரல் அமைச்சின் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் கொள்கை ரீதியான நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய கடமைகளை ஒருங்கிணைத்தல்.
8. திணைக்கள தேவைப்பாடுகளுக்கு அமைய அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்து, அதற்கு அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் வேறு அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புரைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
9. பாராளுமன்றத்தில் வாய்மொழியாக பதில்களை எதிர்பார்த்து வினவப்படும் கேள்விகளுக்கு பதில்களைத் தயாரித்தல்.
10. திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் விசேட கருத்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் மூலதனக் கருத்திட்டங்களின் முன்னேற்றம், ஒருங்கிணைப்பு, வழிநடாத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

**2021 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட விசேட பணிகள்**

- திணைக்களத்தின் கீழுள்ள பிராந்திய அலுவலகங்களை மதிப்பீடு செய்வதற்காக புதிய நடைமுறை யொன்றைத் தயாரித்தல்.
- புதிய பிராந்திய அலுவலகங்களை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வத்தளை பிரதேச செயலகப் பிரிவின் எல்பிட்டிவல கிராம உத்தியோகத்தர் பிரிவின் மில்லகஹவத்த எனும் இடத்தில் வெளிநாட்டவர்களை தற்காலிகமாக தடுத்துவைக்கும் நிலையமொன்றை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- மூலதனக் கருத்திட்டங்கள் 93% முன்னேற்றத்துடன் நிறைவுசெய்ய தேவையான தொழிற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

### 1.5.3.2 இந்தியா – இலங்கை பிரஜைகள் கிளை

குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் பதவி வழியில் இந்திய வம்சாவளி மக்களை பதிவு செய்வதற்கான ஆணையாளர் பதவியை வகிப்பதுடன், கட்டுப்பாட்டாளர் (கொள்கை, அபிவிருத்தி, மறுசீரமைப்பு) பதவி வழியாக இந்திய வம்சாவளி மக்களை பதிவு செய்வதற்கான பிரதி ஆணையாளராக செயற்படுவார்.

1949 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க இந்திய, பாகிஸ்தான் குடியிருப்பாளர்களின் குடியுரிமை தொடர்பான சட்டம், 1967 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இந்திய – இலங்கை உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டம், 1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க நாடற்றோருக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்டம், 2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இந்திய வம்சாவளியினருக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் தகைமை

பெறுவோருக்கு குறித்த சட்டம் அமுலுக்கு வந்த திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் இலங்கைக் குடியுரிமை உரித்தாகின்றது. இலங்கையில் வசிக்கும் இந்திய வம்சாவளி மக்களுக்கு குடியுரிமையை வழங்குவதும் அதனுடன் தொடர்புடைய பிற பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் சீன வம்சாவளி மக்களைப் பதிவுசெய்யும் 2008, இல. 38 எனும் சீன வம்சாவளியுள்ளவர்ளுக்கு பிரஜாவுரிமை வழங்கும் சட்டத்திற்கு அமைய பிரஜாவுரிமை வழங்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற செயற்பாடுகள் இந்தப் பிரிவின் பிரதான பணிகளாகும்.

### 1.5.3.3 சட்டக் கிளை

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பணிகளுடன் தொடர்புடைய சட்ட திட்டங்களூடாக உரித்தாக்கப்பட்டுள்ள சட்டத் தத்துவங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் வழங்குவதன் மூலம் தேவைக்கு ஏற்றவாறு குறித்த சட்ட திட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து திணைக்களத்தின் பணிகளை வினைத்திறனுடன் செவ்வனே நிறைவேற்றுவதற்கு இந்தக் கிளையூடாக ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

**சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் பணிகள்:**

**நீதிமன்ற நடவடிக்கைகள்**

(i) திணைக்களத்தினால் தொடுக்கப்படும் வழக்குகளின் அழைப்பாணைகள், பிடியாணைகளை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்திலிருந்து பெற்றுக்கொள்ளல் மற்றும் அந்த அழைப்பாணைகள், பிடியாணைகளை உரியவர்களிடம் சேர்ப்பித்தல்.

(ii) கட்டுப்பாட்டாளர் நாயகம் அல்லது திணைக்களத்தின் வேறு உத்தியோகத்தரொருவர் பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் வழக்குகளுக்கு ஏற்புடைய அவதானிப்புரைகளை வழங்குதல்.

(iii) கட்டுப்பாட்டாளர் நாயகம் அல்லது திணைக்களத்தின் வேறு உத்தியோகத்தரொருவர் நீதிமன்றத்தில் சாட்சியம் வழங்க அழைப்பாணை வழங்கப்பட்டிருக்குமிடத்து ஏற்புடைய தகவல்கள் மற்றும் கோவைகளைத் தயாரித்து பொருத்தமான உத்தியோகத்தர்களை அன்றைய தினத்தில் நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். இக்காலப் பிரிவில் புதிய வழக்குகள் 103 மற்றும் ஏற்கனவே இருந்த 160 வழக்குகள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(iv) நீதிமன்ற கட்டளைகளை நடைமுறைப்படுத்த முடியாத, தகவல்கள் பூரணமற்ற நீதிமன்றக் கட்டளைகள் தொடர்பில் அறிவூட்டல் கடிதங்கள் மற்றும் நீதிமன்றங்களுக்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய 1052 அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு ஏற்புடைய நீதிமன்றங்களின் பதிவாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

**உடன்படிக்கைகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகள்**

(i) இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ கடவுச் சீட்டுக்களை வைத்திருப்பவர்களுக்காக இருதரப்பு வீசாக்களை விடுவிக்கும் உடன்படிக்கைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு பணிகளை வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளல்.

(ii) திணைக்கள நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பணிகளுக்காக உள்நாட்டு நிறுவனங்களுடன் திணைக்களம் செய்துள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் அவதானிப்புரைகளைச் சமர்ப்பித்தல்.

(iii) இந்தத் திணைக்களத்தின் விடயப் பரப்புக்குள் வரக்கூடிய வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் வேறு அமைச்சுக்கள் வெளிநாடுகளுடன் கைச்சாத்திடவுள்ள வெளிநாட்டு உடன்படிக்கைகள் தொடர்பில் அவதானிப்புரைகளை வழங்குதல் மற்றும் இந்தத் திணைக்களத்தின் விடயப் பரப்புக்கு ஏற்புடையதாக பாதுகாப்பு அமைச்சினால் சமர்ப்பிக்கப்படும் உடன்படிக்கைகள் தொடர்பில் அவதானிப்புரைகளை சமர்ப்பித்தல்.

(iv) மீள் அனுமதி உடன்படிக்கைகளை (re-admission) தயாரிப்பதற்குத் தேவையான உதவியை வழங்குதல் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து தேவையான ஒருங்கிணைப்புப் பணிகளில் ஈடுபடல்.

(v) திணைக்களப் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான கட்டிடங்கள், வீடுகள் தொடர்பில் ஏற்புடைய தரப்புக்களுடன் மேற்கொள்ளும் குத்தகை ஒப்பந்தங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் அதற்குத் தேவையான பணிகளை மேற்கொள்ளல். (கண்டி, குருநாகல், மாத்தறை, வவுனியா அலுவலகங்களின் மற்றும் அம்பாந்தோட்டை, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஊழியர் ஓய்வு விடுதிகளின் குத்தகை ஒப்பந்தங்கள்)

(vi) சேவை வழங்கும் அரச சார்பு நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்களுக்கான சட்ட விடுவிப்புக்களை வழங்குதல்.

(vii) இந்தத் திணைக்களம் வேறு அரசாங்க நிறுவனங்களுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தங்கள் தொடர்பில் அவதானிப்புக்களை வழங்குதல், சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிபாரிசுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் கையொப்பமிடும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.

### வேறு முறைப்பாடுகள்

(i) பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், வேறு நிறுவனங்கள் மற்றும் ஆட்களினால் குடிவரவு, குடியகல்வுத் சட்டங்களுக்கு ஏற்புடையதாக நிகழும் மோசடிகள் தொடர்பில் இந்தப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்ட 30 கடிதங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.

### தகவல் அறியும் உரிமைச் சட்டத்துடன் தொடர்புடைய விடயங்கள்

(i) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட 27 கோரிக்கைகளுக்கு அந்தச் சட்டத்திற்கு அமைய தகவல்களை வழங்குதல்.

(ii) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட 04 மேன்முறையீடுகளுக்கு அந்தச் சட்டத்தின் பிரகாரம் பதிலளித்தல்.

### விசேட கடமைகளை மேற்கொள்ளல்

- சட்டத்திற்கு நிரந்தர வதிவிட வீசாவை அறிமுகம் செய்தல் மற்றும் சட்டத்தில் வீசாவை வழங்கும் காலப் பிரிவை நீடிப்பதற்கான திருத்தங்களை மேற்கொள்வதற்காக குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தை திருத்துவது தொடர்பான நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் குழுவில் மற்றும் சட்டம் தொடர்பிலான பாராளுமன்ற விவாதத்தின் போது அதற்கு சமூகமளித்தல்.
- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம், எல்லை அபாய மதிப்பீட்டு நிலையம் (BRAC ) ஆகிய நிறுவனங்களுடன் இந்தத் திணைக்களம் செய்துகொண்ட ஒப்பந்தங்களைத் தயாரித்தல் மற்றும் கையொப்பமிடுவதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## 1.5.4 வீசா மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவு

கட்டுப்பாட்டாளர் (வீசா மற்றும் எல்லைக் கட்டுப்பாடு) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இந்தப் பிரிவு இயங்குகின்றது. வீசா நடவடிக்கைகள் வீசா கிளையூடாகவும், எல்லைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் துறைமுக, விமான நிலைய மற்றும் விசாரணைக் கிளையூடாகவும் நிறைவேற்றப்படுகின்றன.

### 1.5.4.1 வீசா கிளை

1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் (iii ) ஆம் பிரிவின் கீழ் இலங்கைப் பிரஜை அல்லாதோர் இலங்கைக்குள் பிரவேசிப்பதை கட்டுப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அந்தச் சட்டத்திற்கு அமைய ஆக்கப்பட்ட 1956 ஆம் ஆண்டு குடிவரவு மற்றும் குடியகல்வு ஒழுங்கு விதிகளில் 02 தொடக்கம் 35 வரையிலான ஒழுங்கு விதிகளின் பிரகாரம் இலங்கையின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கு இந்த நாட்டில் சட்டபூர்வமாகத் தங்கியிருப்பதற்கான வீசா அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல் மற்றும் வீசா நீடிப்பு முதலான பணிகள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

வீசாக்களை விநியோகித்தல் மற்றும் நீடிப்புச் செய்வதன் மூலம் நாட்டுக்கு போதியளவு வருமானத்தை ஈட்டிக் கொடுத்தல் மற்றும் அத்தியவசிய துறைகளில் வெளிநாட்டவர்களுக்கு தொழிலில் / சேவையில் ஈடுபடுவதற்கு வசதிகளைச் செய்வதன் மூலம் தேசிய பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல் மற்றும் நாட்டுக்கு சாதகமான வீசா கொள்கைகளை அமுல் செய்தல் என்பன இந்தக் கிளையின் பிரதான நோக்கங்களாகும்.

## வதிவிட வீசா / வசிப்பதற்கான வீசா (Resident Visa)

விசேட நோக்கங்களுக்காக இலங்கையில் நீண்ட காலம் வசிப்பதற்கு உத்தேசிக்கும் பின்வரும் தொகுதிகளைக் கொண்ட இலங்கையர் அல்லாதவர்களுக்கு இவ்வாறான வீசாக்கள் வழங்கப்படுகின்றன.

1. தொழில் புரிவோர்
    - முதலீட்டுச் சபையின் கீழ் கருத்திட்டங்களில் சேவையில் ஈடுபட்டுள்ளோர்.
    - அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள்
    - வெளிநாட்டு தூதரகங்களின் கீழுள்ள நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள்
    - தனியார் கம்பனிகள் / அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களில் பணியாற்றும் ஊழியர்கள்
2. முதலீட்டாளர்கள்
    - இலங்கையில் நிதி மூலதனத்தை முதலிடுவோர்
    - இலங்கையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோர்
3. மத அலுவல்களுக்காக வருகை தருபவர்கள்
    - மத குருமார்
    - மத வழிபாட்டுத் தளங்களை நிர்மாணிப்பவர்கள் / பணிவிடை செய்பவர்கள்
4. மாணவர்கள்
    - பல்கலைக்கழக மாணவர்கள்
    - அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களின் மாணவர்கள்
5. 1967 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தினால் உள்வாங்கப்பட்டு பதிவுசெய்யப்பட்ட இந்தியர்கள்
6. முன்னாள் இலங்கையர்கள் மற்றும் அவர்களில் தங்கி வாழ்வோர்
7. இலங்கையர் ஒருவரின் குடும்ப அங்கத்தவர்கள்
    - கணவன் அல்லது மனைவி
    - வெளிநாட்டு தேசியத்தைக் கொண்ட பிள்ளைகள்
8. இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களில் பணியாற்றுபவர்கள் மற்றும் அவர்களில் தங்கி வாழ்வோர்
9. எனது கனவு வீடு வீசா (My Dream Home)
10. விருந்தினர் வீசா (Residence Guest Scheme)
11. மருத்துவக் காரணிகள் மீது தங்கியிருப்போர்

## வருகை தருவதற்கான வீசா (Visit Visa)

வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலம் மற்றும் இலத்திரனியல் பயண அனுமதியின் கீழ் அல்லது வியாபார நடவடிக்கைகளுக்காக குறுகியகால அடிப்படையில் வெளிநாட்டவர்களுக்கு இந்த வீசாக்கள் வழங்கப்படுகின்றன.

1. சுற்றுலா வீசா (Tourist Visa)

- இலங்கையில் பிரயாணம் செய்தல், உறவினர்களை சந்தித்தல், ஆயுர்வேத சிகிச்சை, யோகா மற்றும் தியானம் போன்ற நடவடிக்கைகளுக்காக குறுகிய காலத்திற்கு வருகைத்தரும் வெளிநாட்டவர்களுக்கு இலத்திரனியல் பயண அனுமதியின் கீழ் 30 நாட்களுக்கு அல்லது அதன் ஒரு குறித்த காலப்பகுதிக்கு இத்தகைய வீசாக்கள் விநியோகிக்கப்படுகின்றன.

2. சுற்றுலா நோக்கம் அல்லாத விடயங்களுக்காக விநியோகிக்கப்படும் வீசா (Business Visa )

- சுற்றுலா நோக்கம் அல்லாது குறுகிய காலத்திற்கு வியாபார நோக்கங்களுக்காக இலங்கைக்கு வருகைத்தரும் வெளிநாட்டவர்களுக்கு இத்தகைய வீசாக்கள் வழங்கப்படுகின்றன. இதன் பொருட்டு ஏற்புடைய விடயத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். (இதன் கீழ் செயலமர்வுகள், கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள், வியாபார கலந்துரையாடல்கள், நிறுவன செயலமர்வுகள் போன்றவற்றில் பங்குபற்றுதல்)

## இடைத்தங்கல் வீசா (Transit Visa)

- இலங்கைக்கு வெளியே வேறு நாடொன்றிலிருந்து இன்னுமொரு நாட்டுக்கு பயணிக்கும் சந்தர்ப்பத்தில் தங்கிச் செல்வதற்காக குறுகிய காலத்திற்கு இலங்கைக்குள் நுழைவதற்கு வழங்கப்படும் வீசாவாகும். இது அதிகபட்டசமாக 02 நாட்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.






## 1.5.4.2 துறைமுக மற்றும் விமான நிலையக் கிளை

இலங்கைப் பிரஜைகள் அல்லாதவர்கள் இலங்கைக்குள் நுழைவதைக் கட்டுப்படுத்தல், அத்தகைய கடவுச்சீட்டுக்கள் வைத்திருப்பவர்களை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதை முறைமைப்படுத்தல், இலங்கை கடவுச்சீட்டை வைத்துள்ள ஒட்டுமொத்த குடிவருவோர் மற்றும் குடியகல்வோரின் தடைநீக்க நடவடிக்கைகளை வினைத்திறனுடன் பயன்மிக்க வகையில் தேசியப் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கி இலங்கையைச் சூழவுள்ள அனைத்து அங்கீகரிக்கப்பட்ட துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களில் மேற்கொள்வது இந்தக் கிளையின் பிரதான பணியாகும்.

### துறைமுக மற்றும் விமான நிலையக் கிளையின் செயற்பாடுகள்

- இலங்கைக்கு வருகை தருகின்ற மற்றும் இலங்கையிலிருந்து வெளியேறுகின்ற பயணிகளின் தடைநீக்க **(Clearance )** நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.

- வெளிநாட்டுத் தூதரகங்கள் இலங்கையில் அமையப் பெற்றில்லாத நாடுகளுக்குச் செல்லத் தேவைப்படுவோருக்கு அந்த நாடுகளுக்கு பிரவேசிப்பதற்குத் தேவையான வீசாக்களைப் பெற்றுக்கொள்வதற்காக அந்த நாடுகளின் தூதரகங்கள் அமைந்துள்ள நாடொன்றிற்கு கடவுச்சீட்டை விரைவான பொதிச் சேவை (கூரியர்) மூலம் அனுப்புவதற்கு அங்கீகாரம் வழங்குதல்.

- இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட துறைமுகங்களில் நங்கூரமிடப்படுகின்ற கப்பல்களின் கப்பற் பணியாட் தொகுதியினருக்கு தங்காலிகமாக தரைக்கு வருவதற்கு அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல்.
- இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டுக் கப்பற் பணியாட்தொகுதியினருக்கு பிணைமுறி (ஸ்ரிக்கர்களை) விநியோகித்தல்.
- வெளிநாடு சென்றுள்ள பயணிகளின் குடிவரவு, குடியகல்வு தொடர்பான தகவல்கள்/ விபரங்கள் அடங்கிய கடிதங்களை பல்வேறு நிறுவனங்களுக்கு அந்த நிறுவனங்களின் கோரிக்கைக்கேற்ப வழங்குதல்.
- இலத்திரனியல் பயண அங்கீகாரம் (ETA) இன்றி இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அந்தந்த விமான நிலையங்களில் மற்றும் துறைமுகங்களில் வைத்து இலத்திரனியல் பயண அங்கீகாரத்தைப் (ETA ) பெற்றுக் கொடுத்தல்.
- இந்த நாட்டிலிருந்து வெளியேறுவதை மற்றும் நாட்டிற்குள் வருவதை தடை செய்து நீதிமன்றங்களினால் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகளை நடைமுறைப்படுத்தலும் பயணிகள் நாட்டிலிருந்து வெளியேறுதல் மற்றும் நாட்டிற்குள் வருகை தருதல் தொடர்பான விபரங்களை / தகவல்களை உசாவி அனுப்பப்படுகின்ற கடிதங்கள் தொடர்பான கடமைகள்.
- இலங்கையிலிருந்து வெளியேறும் போதும் இலங்கைக்கு வருகை தரும் போதும் துறைமுகங்களில் மற்றும் விமான நிலையங்களில் பயணிகளினால் பூரணப்படுத்த வேண்டிய குடிவரவு, குடியகல்வு பத்திரங்களை விநியோகித்தல்.
- துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களில் இணைக்கப்பட்டுள்ள குடிவரவு, குடியகல்வு உத்தியோகத்தர் களினால் நிறைவேற்றப்படுகின்ற சேவைகளை வழிநடாத்தல், மேற்பார்வை செய்தல் மீளாய்வு செய்தல் மற்றும் இற்றைப்படுத்தல்.

### அங்கீகரிக்கப்பட்ட உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் துறைமுகங்களும் விமான நிலையங்களும்

1. பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் – கட்டுநாயக்க
2. மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் – மத்தளை
3. கொழும்பு விமான நிலையம் – இரத்மலானை
4. கொக்கலை விமான நிலையம்
5. யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம்
6. கொழும்புத் துறைமுகம்
7. காலித் துறைமுகம்
8. ருகுணு மாகம்புர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம்
9. திருகோணமலைத் துறைமுகம்
10. தலைமன்னார் இறங்குதுறை
11. நுரைச்சோலை துறைமுகம்
12. ஒலுவில் துறைமுகம்
13. திக்ஓவிட்ட துறைமுகம் (கொழும்புத் துறைமுகத்தின் திக்ஓவிட்ட இறங்குதுறை)

### வெளிநாட்டு கப்பல்துறை பணியாட்களுக்கு பிணைமுறி (ஸ்ரிகர்) விநியோகித்தல்.

அனைத்து கப்பல்துறைப் பணியாளர்களும் நாட்டுக்குள் நுழைவதற்கு முன்னர் பிணைமுறியொன்றுக்கு கையொப்பமிட வேண்டுமென்பதோடு, அதற்காக ரூ. 1150.00 பிணைமுறிக் கட்டணம் அறவிடப்படும். இலங்கைக்கு வருகைதந்து கப்பலில் பணிக்குச் செல்லும் வெளிநாட்டவர்களுக்கும் கப்பலில் பணியாற்றி இலங்கையிலிருந்து வெளியேறும் வெளிநாட்டவர்களுக்கும் இந்த பிணைமுறி விநியோகிக்கப்படும். ஏற்புடைய பிணைமுறிக் கட்டணத்தை நாட்டுக்குள் பிரவேசிப்பவரின் இந்நாட்டு பிரதிநிதியால் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

## 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட பணிகள்

- சர்வதேச தரநியமங்களுக்கு அமைய புதிய பாதுகாப்பு முறைகளுடன் வருகைத்தரும் போது மற்றும் வெளியேறும் போது பயன்படுத்தப்படும் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ முத்திரைகள் மற்றும் அந்த உறைகளை புதிதாக தயாரித்தல். இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- நுரைச்சோலை துறைமுகத்திற்கு அண்மையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தல்.
- திக்ஓவிட்ட மீன்பிடித் துறைமுகத்திற்கு அண்மையில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அலுவலகம் ஒன்றை நிறுவுதல் மற்றும் அங்கிருந்து ஆரம்ப உத்தியோகப்பூர்வ கடமைகளை ஆரம்பித்தல்.
- இரத்மலானை விமான நிலையத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அலுவலக வளாகங்களை மேம்படுத்தல், உத்தியோகத்தர் ஓய்வறையை ஆரம்பித்தல் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.
- காலித் துறைமுகத்திற்கு அண்மையில் புதிய அலுவலக மற்றும் ஓய்வறைக் கட்டிடத்தை நிறுவுவதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து தேவையான ஆரம்பப் பணிகளை மேற்கொள்ளல்.
- மாலுமிகளுக்கான பிணைமுறியை புதுப்பிப்பதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு பரிந்துரைகளை வழங்குதல்.
- மாலுமிகளுக்கான பிணைமுறிகளை இணைய வழியில் மேற்கொள்வது தொடர்பில் தேவையான ஆரம்பப் பணிகளை மேற்கொள்ளல்.
- யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்திற்கு அண்மையில் அலுவலக நடவடிக்கைகளுக்காகவும் நிரந்தரக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக காணியைப் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியப்பாட்டை தேடிப்பார்த்தல்.

## 1.5.4.3 புலனாய்வுப் பிரிவு

1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர், குடியகல்வோர் சட்டம் மற்றும் அந்தச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட 1956 குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் ஒழுங்குவிதிகள் மற்றும் சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைய, இலங்கைக்குள் பிரவேசிக்கும் மற்றும் இலங்கையில் தரித்திருக்கும் வெளிநாட்டவர்களின் செயல் நடவடிக்கைளை கண்காணித்தல், குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தை மீறி இலங்கையில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள் தொடர்பில் புலனாய்வுகளை மேற்கொண்டு அவர்களை கைது செய்தல், தடுத்து வைத்தல், அவர்களை நாட்டிலிருந்து வெளியேற்றுதல் அல்லது நாடுகடத்தல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் என்பன இந்தப் பிரிவின் பிரதான பணிகளாகும்.

இந்தக் கிளை 5 பிரிவுகளைக் கொண்டு இயங்குகின்றது.

1. புலனாய்வுக் கிளை
2. ஆட்கடத்தலை தடுக்கும் தேசிய வள நிலையம் (NAHTRC)
3. இடர் மதிப்பீட்டு நிலையம் (RISK ASSESSMENT CENTER )
4. தடுப்பு முகாம்கள் (DETENTION CENTERS)
5. எல்லை கண்காணிப்பு அலகு (BORDER SURVEILLANCE UNIT)

## 1.5.4.3.1 புலனாய்வு அலகு

குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தை மீறி இந்த நாட்டில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களை கைது செய்தல், தடுத்து வைத்தல் மற்றும் நாட்டிலிருந்து வெளியேற்றும் பணிகள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப் படுகின்றன.

### வெளிநாட்டவர்கள் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டதற்கான காரணங்கள்

1. வீசாக் காலம் கடந்து நாட்டில் தங்கியிருத்தல்.
2. வீசா நிபந்தனைகளை மீறுதல் (உதா : சுற்றுலா வீசாவில் தொழில் புரிதல் அல்லது சமூக விரோத செயலில் ஈடுபடல்)
3. நீதிமன்றக் கட்டளைக்கு அமைய,

### வெளிநாட்டவர்களுக்கு நாட்டுக்குள் நுழைவதற்கு அனுமதி வழங்கப்படாமைக்கான காரணங்கள்:-

1. உண்மையான சுற்றுலாப் பயணியாக இல்லாதிருத்தல்.
2. போலியான கடவுச்சீட்டைப் பயன்படுத்தல்.
3. முறையான வீசா பெற்றிருக்காமை (வீசா வழங்க முடியாத நாடுகள் மற்றும் பிற)
4. இதற்கு முன்னர் குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தை மீறியதன் பேரில் இந்தநாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டவராக இருத்தல்.
5. கறைநிரலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல்.
6. இலத்திரனியல் பயண அனுமதியைப் பெற்றிருக்காமை. (No ETA)
7. போதியளவு பணம் வைத்திருக்காமை.
8. மீண்டும் செல்வதற்கான விமானச் சீட்டை வைத்திருக்காமை.
9. சர்வதேச பொலிஸாரின் சிவப்பு எச்சரிக்கை மற்றும் தரவுகள்.
10. நீதிமன்ற கட்டளைகள்.
11. குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் கட்டளைகள்.

## 1.5.4.3.2 ஆட்கடத்தலை கட்டுப்படுத்தும் தேசிய வள நிலையம் (NAHTRC )

இது இலங்கையில் மற்றும் சர்வதேச ரீதியில் இலங்கையைப் பாதிக்கும் ஆட்கடத்தல் மோசடி தொடர்பில் தலைத்தூக்கும் அச்சுறுத்தலை குறைப்பதற்கு தாபிக்கப்பட்டுள்ள கிளையாகும். இதன் மூலம் ஆட்கடத்தல் தொடர்பான உள்நாட்டுச் சட்டம் 2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவை (திருத்திய) சட்டத்தின் 360 (இ) பிரிவை அமுல்படுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.அத்தோடு திட்டமிடப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச உடன்படிக்கைகளின் பிரகாரம் இலங்கையின் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

### செயற்பாடுகள்

- இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் ஆட்கடத்தலில் அல்லது ஆட்கடத்தல் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனரா என்பதை தேடிப் பார்த்து பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணல், விசாரணைகளுக்கு உட்படுத்தல், விசாரணைகளில் பங்கேற்றல் மற்றும் விசாரணைகள் முடிவுற்ற பின்னர் தாய் நாட்டுக்கு திருப்பி அனுப்பும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

- நீதி அமைச்சின் கீழுள்ள ஆட்கடத்தல் வியாபாரத்தை இல்லாதொழிக்கும் செயலணியினால் தயாரிக்கப்படும் வருடாந்த திட்டத்தில் மற்றும் ஐக்கிய அமெரிக்காவினால் வருடாந்தம் தயாரிக்கப்படும் ஆட்கடத்தல் வியாபாரம் பற்றிய அறிக்கைக்கு (TIP report ) குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதிநிதித்துவத்தை வழங்குதல்.

- குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தை பிரதிநிதித்துவம் செய்து பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் ஆட்கடத்தல் வியாபாரத்தை தடுக்கும் பொருட்டு நடாத்தப்படும் செயலமர்வுகளில் பங்கேற்றல் மற்றும் அவற்றின் வளவாளர்களாக செயற்படுதல்.

- சர்வதேச ரீதியில் திட்டமிடப்பட்ட வகையில் மேற்கொள்ளப்படும் குற்றங்களை தடுப்பதற்காக பயிற்சிப் பிரிவுடன் இணைந்து அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல், அவர்களது அறிவு மற்றும் அனுபவ விருத்திக்கு பங்களிப்புச் செய்தல் மற்றும் சர்வதேச மற்றும் உள்நாட்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்தல்.

- மேற்படி செயற்பாடுகளுக்கு மேலதிகமாக அகதிகள் பற்றிய தகவல் தளமொன்றும் இப்பிரிவினால் பேணப்பட்டுவருகின்றன. 2005 ஆம் வருடத்தில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கு அமைய இந்த நாட்டில் இயங்கிவரும் ஐக்கிய நாடுகள் அமைப்புடன் இணைந்த அரச சார்பற்ற நிறுவனமான ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான ஆணையாளர் அலுவலகத்தின் மூலம் (United Nations High Commissioner for Refugees ) அகதிகள் (Refugees) அந்தஸ்தை கோரும் (Asylum Seekers ) வெளிநாட்டவர்கள் பதிவுசெய்யப்படுவதோடு அகதிகள் அந்தஸ்து வழங்கப்பட்டவர்கள் மீண்டும் மூன்றாவது நாடொன்றுக்கு வசிப்பதற்காக அனுப்பப்படுகின்றனர். குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் இந்தப் பிரிவின் மூலம் இவ்வாறு தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள் தொடர்பில் இற்றைப்படுத்தப்பட்ட தகவல் கோப்பு ஒன்று பேணிவரப்படுகின்றதோடு தேசியப் பாதுகாப்புடன் தொடர்புடைய ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் அந்த தகவல்களை வழங்குதல் மற்றும் அந்த வெளிநாட்டவர்கள் தொடர்பில் குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்திற்கு ஏற்புடைய மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

### வேறு நடவடிக்கைகள்

- எல்லை பாதுகாப்புப் பிரிவுக்கு நியம செயற்பாட்டுத் திட்டமொன்றை அறிமுகம் செய்தல்.
- எல்லை பாதுகாப்புப் பிரிவின் மூலம் அடையாளம் காணப்பட்ட முறையற்ற குடிப்பெயர்வு தொடர்பிலான அறிக்கைகளை ஏற்புடைய பிரிவுகளை அறிவூட்டல்.

## 1.5.4.3.3 இடர் மதிப்பீட்டு நிலையம் (RISK ASSESSMENT CENTER)

- 2019 ஆம் ஆண்டு மே மாதத்தில் புலனாய்வுப் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட இந்த நிலையத்தின் மூலம் எல்லைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய புலனாய்வுத் தகவல்களை சேகரித்தல், தயாரித்தல், திட்டமிடல் மற்றும் பகுப்பாய்வு செய்வதன் மூலம் இலங்கைக்கு வருகைத்தர உத்தேசிக்கும், நாட்டுக்குள் பிரவேசிக்கும், நாட்டினுள் தங்கியிருக்கும் மற்றும் இலங்கையிலிருந்து வெளியேறும் ஆபத்தான பயணிகள் மற்றும் அவர்களது போக்குகளை முன்னரே இனங்காண்பதன் மூலம் அவர்கள் நாட்டுக்குள் வருவதை அல்லது வெளியேறுவதை தடுத்தல் மற்றும் அந்தத் தகவல்களை பாதுகாப்புடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுடன் பரிமாற்றிக்கொள்வது இந்தப் பிரிவின் பணியாகும்.

- இந்தப் பிரிவினால் ஆட்கடத்தல்காரர்கள், பாதிக்கப்பட்டவர்கள், ஆள் மோசடிக் காரர்கள், சட்ட விரோத இடப்பெயர்வாளர்கள், திட்டம்தீட்டும் குற்றவாளிகள், அவர்கள் அதற்காகப் பயன்படுத்தும் பயண வழிப் பாதைகள் இனம்காணப்படுகின்றன.

- பயணி ஒருவர் நாட்டிற்குள் நுழையும் நோக்கத்திற்காக அவர் இலத்திரனியல் (ETA) வீசா ஒன்றினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதனை அனுமதிக்க முன்னர் அவரைப் பற்றித் தேடிப்பார்க்கும் பணி இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

- பிரயாணி ஒருவர் நாட்டிற்குள் நுழையும் சந்தர்ப்பத்தில் விமான நிலையத்தில் ஏற்புடைய பயணியை நாட்டிற்குள் அனுமதிக்க முடியுமா என்பது பற்றிய மேலதிக பரீட்சிப்பொன்றை செய்வதற்கு குடிவரவு, குடியகல்வு உத்தியோகத்தர்களுக்கு வழிகாட்டுவதற்கும் நாட்டிற்குள் நுழைந்த பயணி ஒருவர் குடிவருவோர் குடியகல்வோர் சட்டத்தை மீறும் சந்தர்ப்பத்திலும் புலனாய்வு நடவடிக்கைகளுக்கு தேவையான தகவல்களை வழங்குவதன் மூலம் புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவது இப்பிரிவின் பணியாகும்.

### 1.5.4.3.4 வெளிநாட்டவர் தடுப்பு நிலையங்கள் (வெலிசறை மற்றும் மிரிஹானை) (Detention Centers )

குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தை மீறி இலங்கையில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள் மற்றும் இலங்கையில் பல்வேறுபட்ட குற்றங்கள் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட பின்னர் அந்த வெளிநாட்டவர்களை இந்த நாட்டிலிருந்து அகற்றப்படும் வரையில் தடுத்துவைத்தல் மற்றும் அது வரையில் அவர்களது அடிப்படையில் தேவைகளைப் பூர்த்திசெய்தல் மற்றும் தேவையான மருத்துவ சிகிச்சைகளுக்கு முன்னிலைப்படுத்தல் என்பன இந்த தடுப்பு நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த வெளிநாட்டு தடுப்பு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர்கள்:

01. புலனாய்வுப் பிரிவின் மூலம் குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தை மீறியதன் காரணமாக கைதுசெய்யப்பட்ட வெளிநாட்டவர்கள்
02. நீதிமன்றக் கட்டளையின் மீது நாட்டிலிருந்து நாடுகடுத்துவதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்படும் வெளிநாட்டவர்கள்
03. குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தை மீறியதன் காரணமாக இலங்கை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட வெளிநாட்டவர்கள்
04. குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தை மீறி சுயமாக திணைக்களத்திற்கு ஆஜராகும் வெளிநாட்டவர்கள்

### 1.5.4.3.5 எல்லைக் கண்காணிப்பு அலகு (BORDER SURVEILLANCE UNIT )

திட்டமிடப்பட்ட குற்றச் செயலாகக் கருதப்படும் ஆட்கடத்தல் வியாபாரத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மேற்படி அலகு 2019 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நிறுவப்பட்டது.

#### மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள்

- இதன் மூலம் ஆட்கடத்தல் வியாபாரிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள், ஆட்கடத்தல் காரர்கள் சுற்றுலா வீசாக்களை துஷ்பிரயோகம் செய்வோர் ஆகியோரை அடையாளம் காண்பது தீவிரப்படுத்தப்படுகின்றது. இந்த அலகின் மூலம் கண்டறியப்படும் புலனாய்வுத் தகவல்களை புலனாய்வுப் பிரிவுக்கு மற்றும் ஆட்கடத்தலை தடுக்கும் தேசிய வள நிலையத்திற்கு அறிவிப்பதன் மூலம் ஆட்கடத்தல் / சட்ட விரோத வியாபாரம் அல்லது வேறு திட்டமிடப்பட்ட குற்றங்கள் பற்றிய புலனாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே, புலனாய்வுப் பிரிவினால் கண்டறியப்படும் புலனாய்வுத் தகவல்கள் அந்தப் பிரிவுக்கு அறிவிக்கப்படுவதனால் விமான நிலையத்தில் அதிகாரிகளின் கடுமையான பரீட்சிப்புக்கு ஆளாக்கப்படுவர். விமான நிலையத்திலுள்ள ஆவணக் காப்பகம் இந்த அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் செயற்படுகின்றது.

- முறையற்ற குடிப்பெயர்வு அல்லது ஆட்கடத்தல் வியாபரம் தொடர்பில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய வளாகத்தில் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பயணிகள் மேற்கொள்ளும் குற்றங்களை இனங்காணல், சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு ஆற்றுப்படுத்தல் போன்ற பணிகள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டு வருகைத் தரும் தளத்தில் இனங்காணப்பட்ட 15 சம்பவங்களும் வெளியேறும் தளத்தில் இனங்காணப்பட்ட சம்பவங்கள் 37 உம் அறிக்கையிடப்பட்டுள்ளன. அதன் போது இனங்காணப்பட்ட சம்பவங்கள் குறித்து சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

- இந்தப் பிரிவுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் பரீட்சிப்பு ஆய்வுகூடம் (Document Lab ) மூலம் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆவணங்களின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதோடு, அந்த நிலமைகள் இந்தத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு மற்றும் விமான சேவை கம்பனிகளுக்கு மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன.




## 1.5.5 தகவல் தொழில்நுட்பப் பிரிவு

கட்டுப்பாட்டாளரின் (தகவல் தொழில்நுட்பம்) மேற்பார்வையின் கீழ் இப் பிரிவு இயங்குகின்றது.
திணைக்களத்தின் தற்போது பயன்பாட்டிலுள்ள மென்பொருள் முறைமைகளையும், வன்பொருள் முறைமைகளையும் தடையின்றி பேணிச் செல்வதும் பொது மக்களுக்கு உயரிய சேவைகளை வழங்குவதும் அரசுக்கு உச்ச நன்மை கிடைக்கும் விதத்தில் புதிய தொழில்நுட்ப முறைமைகளை அறிமுகம் செய்த வண்ணம் தகவல் முறைமையை விருத்தி செய்வதும் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் பிரதான பணிகளாகும்.

அதே போன்று, இந்தத் திணைக்களத்தின் கணினி முறைமைக்கான சேவைகளை வழங்கும் வெளி நிறுவனங்களுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களை உரியவாறு இற்றைப்படுத்தல், ஒப்பந்தங்களின் பிரகாரம் நடவடிக்கைகளை பேணிச் செல்லல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பனவும் இந்தப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்ற மற்றும் சில பணிகளாகும்.

இதற்கு மேலதிகமாக, கீழ்க் காணும் முக்கிய பணிகளும் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

- திணைக்களத்தின் தேவைகளுக்கு ஏற்ப தரவுத் தளங்கள் மற்றும் மென்பொருள் அபிவிருத்திக்கு தேவையான தொழில்நுட்ப உதவியை வழங்குதல்.
- திணைக்களத்திற்கு இணையத்தளமொன்றை நிர்மாணித்தல் மற்றும் இற்றைப்படுத்தல்.
- புதிய கணினி உபகரணங்களை கொள்வனவு செய்து மிகவும் சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் பயன்பாட்டிலுள்ள வன்பொருட்கள் மற்றும் மென்பொருள் தொகுதியை தரமுயர்த்தல் (Upgrade ).
- நீதிமன்ற உத்தரவுகளுக்கு அமைய பயணிகளின் விமானப் பயண நடவடிக்கைகளை இற்றைப்படுத்தல்.
- கட்டுப்பாட்டாளர் (கடவுச்சீட்டு) அவர்களின் உத்தரவுக்கு அமைய கடவுச்சீட்டுக்களை கறைநிரலில் சேர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

### இந்தப் பிரிவின் கீழ் பின்வரும் கிளைகள் இயங்குகின்றன.

### 1.5.5.1 காணாமல் போன மற்றும் களவாடப்பட்ட கடவுச் சீட்டுப் பிரிவு (SLTD )

காணாமல் போன அல்லது களவாடப்பட்ட கடவுச் சீட்டுக்கள் தொடர்பில் பொலிஸ் திணைக்களத்தினால் வழங்கப்படும் தகவல்கள் மத்திய தகவல் பணியகத்தினால் அல்லது வெளிநாட்டு தூதரகப் பிரிவினால் நேரடியாக அல்லது திணைக்களத்திற்கு தகவல்கள் பரிமாற்றப்படுகின்றன. அவை புலனாய்வு செய்யப்பட்டு அந்த கடவுச் சீட்டுக்களை மீண்டும் பயன்படுத்த முடியாதவாறு இரத்துச்செய்து சர்வதேச பொலிஸாருக்கு (INTERPOL) அனுப்பப்படுகின்றது. அவ்வாறான கடவுச் சீட்டொன்றின் மூலம் வேறு ஆளொருவர் வெளிநாடு செல்வதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, அவ்வாறான சட்ட விரோத செயல்களை தடுப்பது (SLTD) தொகுதியின் பிரதான நோக்கமாகும்.

2021.01.01 ஆம் திகதி முதல் 2021.12.31 ஆம் திகதி வரையில் மத்திய தகவல் பணியகத்தினால் (NCB ) மற்றும் வெளிநாட்டு தூதரகப் பிரிவினால் (SLDM ) கடவுச் சீட்டுக்கள் 4961 திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதோடு, 3646 கடவுச் சீட்டுக்கள் சர்வதேச பொலிஸின் தரவுத் தளத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. எஞ்சிய கடவுச்சீட்டுக்கள் உரிமையாளர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

### 1.5.5.2 இணைந்த தகவல் முகாமைத்துவப் பிரிவு (IEMS)

குடிவரவு, குடியகல்வு தகவல்கள் மற்றும் புள்ளிவிபரத் தரவுகளை வழங்குவதற்காக இணைந்த தகவல் முகாமைத்துவப் பிரிவு (IEMS) நிறுவப்பட்டுள்ளது. இலங்கையில் அமைந்துள்ள வெளிநாட்டு தூதரகங்கள் நேரடியான தொடர்பைப் பேணுவது இப்பிரிவுடனாகும். தேவையான போது வீசா வழங்குவதற்கு முன்னர் கடவுச் சீட்டு தொடர்பான உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ளும் நடவடிக்கை இப்பிரிவினூடாக மேற்கொள்ளப்படுகின்றது. 2021.01.01 ஆம் திகதி முதல் 2021.12.31ஆம் திகதி வரை எமது திணைக்களத்தினால் 268 வினவுகைளுக்கு பதில் வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.5.3 மீண்டும் பொறுப்பேற்கும் பிரச்சினை முகாமைத்துவத் தொகுதி (RCMS )

வெளிநாடு ஒன்றில் நாடுகடத்தப்படும் இலங்கையர்களை அந்தந்த நாடுகளில் காணப்படும் தூதரகங்கள் ஊடாக அவர்களது தகவல்கள் தொடர்பில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கணினித் தொகுதியின் மூலம் எமது திணைக்களத்திற்கு அறிவிக்கப்படும். அந்த கணினித் தொகுதியூடாகவே திணைக்களத்திலுள்ள கடவுச் சீட்டுத் தரவுகள் மற்றும் ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தின் தரவுகளைப் பயன்படுத்தி இறுதியாக அந்த ஆள் இலங்கைப் பிரஜையா என்பது உறுதிப்படுத்தப்படும். அதன் பின்னர் தற்காலிக கடவுச் சான்றிதழொன்றை வழங்குவதற்கு பரிந்துரைக்கப்படும்.

#### 2021 ஆம் ஆண்டில் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

- குடிவரவு மற்றும் குடியகல்வு புலனாய்வுப் பிரிவு, எல்லைப் பாதுகாப்புப் பிரிவு, திணைக்கள இணையவழித் தொகுதி மற்றும் மென்பொருள்களை மேம்படுத்தல்.
- குடியுரிமை மற்றும் வெளிநாட்டு தூதரகக் கிளையின் விண்ணப்பங்களை இணையவழியில் சமர்ப்பிப்பதற்கான முறையொன்றை தயாரித்தல்.
- புள்ளிவிபரவியல் அறிக்கைகள் மற்றும் உபகரணப் பலகையை மேம்படுத்தல். (Statistical Report and Genaration Unit )
- சர்வதேச பொலிஸாருடன் காணப்படும் தொடர்புகளை இற்றைப்படுத்தல்.

### 1.5.6 பிரஜாவுரிமைப் பிரிவு / குடியுரிமைப் பிரிவு

1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க குடியுரிமை / பிரஜாவுரிமைச் சட்டத்தினால் குடியுரிமைப்/ பிரஜாவுரிமைப் பிரிவிற்கு நியதிச்சட்டத் தத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. பிரஜாவுரிமைச் சட்டத்தை அமுல் செய்யும் நிறைவேற்றுத் தத்துவம் நிரல் அமைச்சின் செயலாளருக்கே உண்டு. பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழான ஏற்பாடுகளும் நிறைவேற்று நடைமுறைகளும் குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் கீழ் கட்டுப்படுத்தப்படுகின்றவெளிநாட்டுத் தூதரகங்களூடாக கடவுச்சீட்டு விநியோக தொழிற்பாட்டுடன் நேரடியாகத் தொடர்புபடுவதால், பிரஜாவுரிமைப் பிரிவு குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ளது.

### 1.5.7 நிதிப் பிரிவு

பிரதான கணக்காளரின் மேற்பார்வையின் கீழ் கணக்காளர் (செலவினம்) மற்றும் கணக்காளர் (வருமானம்) ஆகியோரின் வழிகாட்டலின் பேரில் கொடுப்பனவுப் பிரிவு, வரவுசெலவுப் பிரிவு, கணினிப் பிரிவு மற்றும் வருமானப் பிரிவு என்ற அடிப்படையில் நிதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### செயற்பாடுகள்

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளை சீராக மேற்கொள்வதே நிதிப் பிரிவின் பிரதான பணியாகும். வருமானம் ஈட்டும் திணைக்களம் என்ற வகையில், திணைக்களத்தின் வருமதிகளையும், செலவினங்களையும் முகாமை செய்தல், அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு நடவடிக்கைகளை உரிய

எல்லைக்குள் பேணிச் செல்லல், திறைசேரிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக, இந்தத் திணைக்களத்தின் வருடாந்த / மாதாந்த அறிக்கைகளை (வருடாந்த வரவு – செலவு மதிப்பீட்டு, வருடாந்த வருமதி மதிப்பீட்டு, ஒதுக்கீட்டுக் கணக்கு, மாதாந்த கணக்குப் பொழிப்பு) தயாரித்து உரிய திகதிக்கு திறைசேரிக்கு சமர்ப்பித்தல் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கு அமைவாக நிதி நடவடிக்கைகளை வழிநடாத்தல் என்பனவும் இந்தப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்ற செயற்பாடுகளாகும்.

### (அ) வருமானம்

2021 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமான இலக்கு 19.67 பில்லியன் ரூபாவாகும். ஆயினும் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் கொறோனா பெருந்தொற்று பரவியதன் காரணத்தினால் ஏற்பட்ட நிலமைகளின் கீழ் உத்தேச வருமான இலக்கை 5.67 பில்லியன் ரூபா வரை திருத்தியமைப்பதற்கு நேரிட்டது. அந்த வருமான இலக்கு காணப்பட்ட வருமான ஈட்டலின் போக்கின் மீது எதிர்வுகூறப்பட்ட போதிலும் அந்த வருமான எல்லையை தாண்டிச் சென்று 2021 ஆம் ஆண்டில் உண்மையாகவே உழைக்கப்பட்ட மொத்த வருமானம் 8.66 பில்லியன் ஆகும். 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டை விட நான்காம் காலாண்டில் அனைத்து வருமான மூலங்களும் அதிகரித்த காரணத்தினால் மொத்த வருமானமும் அதிகரித்தது. இது 2020 ஆம் ஆண்டில் உழைக்கப்பட்ட மொத்த வருமானமான ரூ.பில். 5.53 உடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் ரூ.பில். 3.13 வருமான ஈட்டலில் வளர்ச்சி காணப்படுகின்றது.

### (ஆ) செலவினம்

2021 ஆம் வருடத்தில் திணைக்களத்தின் செலவுகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட (திருத்திய) நிதி ஒதுக்கீடு ரூ.மில் 3,137.80 ஆகும். அந்த நிதி ஒதுக்கீடுகளில் ரூ.மில். 1,927.30 தொகை மீண்டுவரும் செலவினங்களுக்காகவும் ரூ.மில். 1,210.50தொகை மூலதனச் செலவினங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டில் மொத்தச் செலவினம் ரூ.மில். 2,675.33 ஆகும். அதில் மீண்டுவரும் செலவினங்களுக்காக ரூ.மில். 1,712.25 தொகையும் மூலதனச் செலவினங்களுக்காக ரூ.மில். 963.08 தொகையும் செலவிடப்பட்டுள்ளது. மொத்த மூலதனச் செலவினங்களில் ரூ.மில். 100.00 தொகையை கட்டாய சேமிப்பாக தடுத்துவைப்பதற்கு உட்பட்ட வகையில் இந்தச் செலவினம் அறிக்கையிடப்பட்டுள்ளது.

## 1.5.8 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

பிரதம உள்ளகக் கணக்காய்வாளரின் மேற்பார்வையின் கீழ் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு இயங்குகின்றது.

### குறிக்கோள்கள்:

திணைக்களத்தின் தொழிற்பாட்டு செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக வழிகாட்டும் சுயாதீன அத்தாட்சிப்படுத்தல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.

### உள்ளக கணக்காய்வின் விடயப் பரப்பு

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் மற்றும் அதன் கீழுள்ள அனைத்து பிரிவுகளின் கீழ் வரும் அனைத்து துறைகளையும் மீளாய்வுசெய்தல், அந்த மீளாய்வுக்குத் தேவையான அறிக்கைகள் மற்றும் ஆவணங்களை பரீட்சித்தல் மற்றும் களஞ்சியசாலைகள் மற்றும் ஆட்களிடம் பிரவேசித்தல்.

### 2021 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பணிகள்

### மேற்கொள்ளப்பட்ட உள்ளக கணக்காய்வுப் பரிசோதனைகள்

(i) திணைக்கள வாகனப் பாவனை தொடர்பான பரிசோதனை.

(ii) 2021 ஜனவரி மாத உறுதிச்சீட்டுக்களை பரீட்சித்தல்.

(iii) 2021 மார்ச் மாத உறுதிச்சீட்டுக்களை பரீட்சித்தல்.

(iv) விசேட கணக்காய்வுப் பரிசோதனை – குருநாகல் பிராந்திய அலுவலகம்.

(v) திணைக்களத்தின் சுத்திகரிப்பு சேவை தொடர்பில் உள்ளக கணக்காய்வுப் பரிசோதனை.

(vi) நிறுவனத்தின் இயந்திர உபகரணங்கள் பராமரிப்பு மற்றும் சேவை தொடர்பில் உள்ளக கணக்காய்வுப் பரிசோதனை.

(vii) சம்பளம் வழங்குதல் தொடர்பில் உள்ளக கட்டுப்பாட்டுத் தொகுதியைப் பரீட்சித்தல்.

(viii) திணைக்களத்தின் இயந்திர உபகரணங்கள் பராமரிப்பு, சர்விஸ் செய்தல், பழுதுபார்ப்பு மற்றும் சேவை ஒப்பந்தங்களை புதுப்பித்தல் தொடர்பில் உள்ளக கணக்காய்வுப் பரிசோதனை.

(ix) திணைக்களத்தின் 2020 ஆம் ஆண்டு தொடர்பில் தயாரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வுப் பரிசோதனை.

(x) இலங்கை வங்கி பம்பலப்பிட்டி கிளையில் கணக்கு இலக்கம் 70414423 எனும் கணக்கிற்கு ஏற்புடைய வங்கிக் கணக்கிணக்கக் கூற்றை தயாரித்தல் பற்றிய உள்ளக கணக்காய்வுப் பரிசோதனை.

## சமர்ப்பிக்கப்பட்ட விசேட அறிக்கைகள்

(i) 2021 பிரதான உள்ளக கணக்காய்வாளரின் பிரதான அறிக்கையைத் தயாரித்தல்.

(ii) 2021 ஆம் ஆண்டுக்குரிய முதலாவது காலாண்டின் வருமான பகுப்பாய்வு அறிக்கையைத் தயாரித்தல்.

(iii) 2021 ஆம் ஆண்டுக்குரியமுதலாவது காலாண்டின் செலவுப் பகுப்பாய்வு அறிக்கையைத் தயாரித்தல்.

(iv) 2021 ஆம் ஆண்டுக்குரிய இரண்டாவது காலாண்டின் வருமான பகுப்பாய்வு அறிக்கையைத் தயாரித்தல்.

(v) 2021 ஆம் ஆண்டுக்குரிய இரண்டாவது காலாண்டின் செலவுப் பகுப்பாய்வு அறிக்கையைத் தயாரித்தல்.

(vi) 2021 ஆம் ஆண்டுக்குரிய மூன்றாவது காலாண்டின் வருமான பகுப்பாய்வு அறிக்கையைத் தயாரித்தல்.

(vii) 2021 ஆம் ஆண்டுக்குரிய மூன்றாவது காலாண்டின் செலவுப் பகுப்பாய்வு அறிக்கையைத் தயாரித்தல்.

(viii) 2021 ஆம் ஆண்டுக்குரிய முதலாவது காலாண்டின் பிரதான உள்ளக கணக்காய்வாளரின் காலாண்டு மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்தல்.

(ix) 2021 ஆம் ஆண்டுக்குரிய இரண்டாவது காலாண்டின் பிரதான உள்ளக கணக்காய்வாளரின் காலாண்டு மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்தல்.

(x) 2021 ஆம் ஆண்டுக்குரிய மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டின் பிரதான உள்ளக கணக்காய் வாளரின் காலாண்டு மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்தல்.

- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு கூட்டத்தை நடாத்துதல்

- **வேறு விசேட செயற்பாடுகள்**

(i) வருடாந்த கணக்குப் பரிசோதனை – திணைக்கள நலன்புரிச் சங்கம்.

(ii) 2021 திருத்திய உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை தயாரித்தல்.(2021 டிசம்பர்)

(iii) 2022 அபாய அடிப்படையிலான உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை தயாரித்தல்.

# அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

## 2.1 2021ஆம் ஆண்டில் அடையப்பெற்ற முன்னேற்றம்.

### 2.1.1 கடவுச்சீட்டுப் பிரிவு

#### 2.1.1.1 கடவுச் சீட்டு விநியோகித்தலில் அடையப்பெற்ற முன்னேற்றம்

1) 2021 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அனைத்துவிதமான கடவுச் சீடடுக்களினதும் எண்ணிக்கை

| இராஜதந்திர | உத்தியோகபூர்வ | சகல நாடுகளுக்கும் | அவசர சான்றிதழ் | அடையாள சான்றிதழ் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 398 | 860 | 381,279 | 1 | - | 382,560 |

2) பிராந்திய அலுவலகங்கள் மூலம் வழங்கப்பட்ட கடவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை

| அலுவலகம் | இராஜதந்திர | உத்தியோகபூர்வ | சகல நாடுகளுக்கும் | அவசர சான்றிதழ் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கண்டி | 1 | 2 | 27,392 | 0 | **27,395** |
| வவுனியா | 0 | 0 | 22,708 | 0 | **22,708** |
| மாத்தறை | 0 | 0 | 20,755 | 0 | **20,755** |
| குருணாகல் | 0 | 0 | 22,308 | 0 | **22,308** |
| **மொத்தம்** | **1** | **2** | **93,163** | **0** | **93,166** |



3) 2017 ஆம் முதல் 2021 ஆம் ஆண்டு வரை கடவுச் சீட்டு விநியோகம் (கடவுச் சீட்டு வகைக்கு அமைய)

| வருடம் | இராஜதந்திர | உத்தியோக பூர்வ | சகல நாடுகளுக்கும் | மத்திய கிழக்கு நாடுகள் | அவசர சான்றிதழ் | அடையாள சான்றிதழ் | கடவுச்சீட்டுக் களின் எண்ணிக்க |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 | 339 | 1,819 | 369,197 | 173,901 | 17,787 | 1 | **563,044** |
| 2018 | 364 | 1,934 | 392,317 | 187,869 | 21,246 | 2 | **603,732** |
| 2019 | 314 | 1,585 | 545,883 | 3,916 | 19,674 | 1 | **571,373** |
| 2020 | 175 | 404 | 204,081 | 13 | 4,738 | 0 | **209,411** |
| 2021 | 398 | 860 | 381,301 | - | 1 | - | **382,560** |
| மொத்தம் | 1,590 | 6,602 | 1,892,779 | 365,699 | 63,446 | 4 | 2,330,120 |




4) 2017 ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரை பிராந்திய அலுவலகங்களினால் வழங்கப்பட்ட கடவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை

| அலுவலகம் | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| கண்டி | 42793 | 42364 | 45982 | 16230 | 27,395 |
| வவுனியா | 21192 | 23856 | 29820 | 12269 | 22,708 |
| மாத்தறை | 24722 | 26704 | 32109 | 11353 | 20,754 |
| குருணாகல் | 3709 | 19336 | 29589 | 11451 | 22,306 |
| மொத்தம் | 92416 | 112260 | 137500 | 51303 | 93,163 |




## 2.1.1.2 கடவுச்சீட்டு திருத்தக் கிளை

**1) பிரதான அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும் கடவுச் சீட்டு திருத்தங்கள் - 2021**

| வகை | மொத்தம் |
|---|---|
| ஒரு வெளிநாட்டுப் பயணத்திற்கு மாத்திரம் செல்லுபடியாக்கல் | 143 |
| தனிவழிப் பயணக் கட்டுப்பாட்டை இரத்துச் செய்தல் | 1262 |
| இரட்டைப் பிரஜாவுரிமையை உள்ளடக்குதல் | 61 |
| பிள்ளைகளின் விபரங்களை நீக்குதல் | 28 |
| அடையாள அட்டை இலக்கத்தை உள்ளடக்குதல் | 2119 |
| திருமணத்திற்கு முன்னரான பெயரை இடுதல் | 70 |
| பெயர் மாற்றம் செய்தல் | 2216 |
| திருமணத்திற்கு பின்னரான பெயரை இடுதல் | 294 |
| வேறு திருத்தங்கள் 01 | 3000 |
| வேறு திருத்தங்கள் 02 | 35 |
| பதவியை உள்ளடக்குதல் | 12193 |
| திருமணத்திற்கு முன்னரான பெயரை இடுதல் | 3 |
| **மொத்தம்** | **21424** |

**2) பிராந்திய அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் கடவுச் சீட்டு திருத்தங்கள் - 2021**

| வகை | கண்டி | வவுனியா | மாத்தறை | குருநாகல் |
|---|---|---|---|---|
| ஒரு வெளிநாட்டுப் பயணத்திற்கு மாத்திரம் செல்லுபடியாக்கல் | 1 | 4 | - | 11 |
| தனிவழிப் பயணக் கட்டுப்பாட்டை இரத்துச் செய்தல் | 67 | 52 | 55 | 55 |
| இரட்டைப் பிரஜாவுரிமையை உள்ளடக்குதல் | 4 | - | 2 | 3 |
| பிள்ளைகளின் விபரங்களை நீக்குதல் | 1 | 1 | 3 | 1 |
| அடையாள அட்டை இலக்கத்தை உள்ளடக்குதல் | 172 | 106 | 127 | 118 |
| திருமணத்திற்கு முன்னரான பெயரை இடுதல் | 1 | 31 | 1 | 276 |
| பெயர் மாற்றம் செய்தல் | 342 | 212 | 133 | 3 |
| திருமணத்திற்கு பின்னரான பெயரை இடுதல் | 8 | 188 | - | 163 |
| வேறு திருத்தங்கள் 01 | 173 | 97 | 79 | 2 |
| வேறு திருத்தங்கள் 02 | 2 | 2 | - | - |
| பதவியை உள்ளடக்குதல் | 926 | 463 | 433 | 2256 |
| புதுப்பித்தல் | - | 1 | - | - |
| **மொத்தம்** | **1697** | **1157** | **833** | **2888** |

## 2.1.1.3 வெளிநாட்டுத் தூதரகக் கிளையின் முன்னேற்றம்

**1) 2021 ஆம் ஆண்டு இந்தக் கிளை ஊடாக விநியோகிக்கப்பட்ட கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கை**

| மாதம் | எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | 1983 |
| பெப்ரவரி | 2793 |
| மார்ச் | 6148 |
| ஏப்ரல் | 3411 |
| மே | 6582 |
| ஜுன் | 8815 |
| ஜுலை | 5983 |
| ஆகஸ்ட் | 5580 |
| செப்டம்பர் | 4011 |
| ஒக்டோபர் | 5956 |
| நவம்பர் | 4186 |
| டிசம்பர் | 5440 |
| **மொத்தம்** | **60888** |

2) 2017 ஆம் ஆண்டு முதல் 2021 வரை வெளிநாட்டுத் தூதரகக் கிளையினால் விநியோகிக்கப்பட்ட கடவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை

| மாதம் | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | 3043 | 3221 | 3785 | 3610 | 1983 |
| பெப்ரவரி | 3457 | 3241 | 2681 | 4370 | 2793 |
| மார்ச் | 4603 | 3786 | 4035 | 2243 | 6148 |
| ஏப்ரல் | 4038 | 3760 | 4088 | 3112 | 3411 |
| மே | 4532 | 6501 | 5448 | 1935 | 6582 |
| ஜூன் | 4614 | 3298 | 3858 | 3147 | 8815 |
| ஜூலை | 3752 | 6025 | 3684 | 3155 | 5983 |
| ஆகஸ்ட் | 4167 | 3763 | 3778 | 3630 | 5580 |
| செப்டம்பர் | 3358 | 3377 | 3593 | 5583 | 4011 |
| ஒக்டோபர் | 2805 | 4785 | 4052 | 5290 | 5956 |
| நவம்பர் | 4016 | 3402 | 3142 | 4331 | 4186 |
| டிசம்பர் | 3162 | 3633 | 2950 | 2795 | 5440 |
| மொத்தம் | **45547** | **48792** | **45094** | **43201** | **60888** |



## 2.1.2 வீசா மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவு

### 2.1.2.1 வீசாப் பிரிவு

1) **2021 ஆம் ஆண்டில் இலத்திரனியல் பயண அனுமதியை வழங்குதல், புதிய வீசா விநியோகம் மற்றும் நீடிப்பு தொடர்பான முன்னேற்றம்.**

| விபரம் | 2021 |
|---|---|
| இ – பயண அனுமதியை வழங்குதல் | 234309 |
| வசிப்பதற்கான வீசா வழங்குதல் | 14848 |
| வசிப்பதற்கான வீசாக்களை நீடித்தல் | 27918 |
| குறுகிய கால அடிப்படையில் வீசாக்களின் காலத்தை நீடித்தல் (குறுகியகால, வியாபார மற்றும் பலமுறை நுழைவு வீசா) | 20246 |
| இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதன் காரணமாக வீசா தேவையிலிருந்து விடுவித்தல் (இலங்கையர்) | 468 |
| **மொத்தம்** | **297841** |



2) வசிப்பதற்கான வீசாக்களை நீடித்தல் மற்றும் விநியோகித்தல் பற்றிய விரிவான குறிப்பு - 2021

| வசிப்பதற்கான வீசா வகைகள் | நீடித்தல் | விநியோகித்தல் | தூதரகங்களுக்கு அனுப்பப்பட்ட தொலைநகல் செய்திகள் | விமான நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட செய்திகள் (Landing Endorsement) |
|---|---|---|---|---|
| முதலீட்டுச் சபைகளில் பணியாற்றுபவர்கள் | 6654 | 2638 | 2391 | 1626 |
| இலங்கைப் பெற்றோர்களின் பிள்ளைகள் | 365 | 354 | 0 | 0 |
| குடியுரிமைச் சட்டத்தின் 5.2 ஆம் பிரிவின் கீழ் | 103 | 131 | 0 | 0 |
| குடியுரிமைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் | 65 | 66 | 0 | 0 |
| மதகுருமார் | 1202 | 95 | 81 | 20 |
| நீதிமன்றக் கட்டளைகள் | 217 | 37 | 0 | 0 |
| இராஜதந்திர | 342 | 374 | 342 | 208 |
| முன்னர் இலங்கையர்களாக இருந்தவர்கள் | 1859 | 1923 | 0 | 0 |
| மருத்துவக் காரணிகள் மீது வருகைதந்தவர்கள் | 675 | 386 | 6 | 2 |
| அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGO+INGO) | 374 | 250 | 244 | 95 |
| அரசாங்க துறையின் கருத்திட்டங்களில் பணியாற்றுவதற்கு வந்துள்ளவர்கள் | 188 | 252 | 82 | 46 |
| தனியார் துறையில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் | 4839 | 4355 | 2686 | 1295 |
| பதிவு செய்யப்பட்ட இந்தியர்கள் | 6 | 1 | 0 | 0 |
| மத அலுவல்களுக்காக வருகைத் தந்தவர்கள் | 123 | 31 | 78 | 4 |
| நீண்டகால வதிவிட வீசா (05 வருடங்கள்) (RGS ) | 11 | 0 | 0 | 0 |
| இரட்டைக் குடியுரிமை (மேலொப்பம் இடல்) | 129 | 303 | 0 | 0 |
| இலங்கைப் பிரஜைகளின் வாழக்கைத்துணை | 4356 | 1202 | 0 | 0 |
| தொழிலில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு வாழ்க்கைத்துணை | 0 | 1 | 0 | 0 |
| SSRV ( My Dream Home) | 223 | 46 | 0 | 0 |
| உத்தியோகபூர்வ | 2261 | 2472 | 1703 | 1468 |
| மாணவர்கள் / புலமைப் பரிசாளர்கள் | 4593 | 837 | 434 | 224 |
| நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ளோர் | 0 | 0 | 0 | 0 |
| இலங்கை பிரஜைகளின் தங்கிவாழ்வோர் | 10 | 3 | 0 | 0 |
| SAARC வீசா | 0 | 52 | 0 | 0 |
| **மொத்தம்** | **28595** | **15809** | **8047** | **4988** |

## 2.1.2.2 துறைமுக மற்றும் விமான நிலையக் கிளை

1) **அனுமதிக்கப்பட்ட துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் ஊடாக இலங்கைக்கு வருகை தந்த மற்றும் வெளியேறிய பயணிகளின் எண்ணிக்கை – 2021**

| துறைமுகம் / விமான நிலையம் | வருகை தந்தோரின் எண்ணிக்கை | வெளியேறியோரின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|
| கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் | 561,890 | 476,831 | 1,038,721 |
| ஹம்பாந்தோட்டை துறைமுகம் | 463 | 279 | 742 |
| மத்தளை விமான நிலையம் | 17,971 | 15,321 | 33,292 |
| கொழும்புத் துறைமுகம் | 3,415 | 3,965 | 7,380 |
| காலித் துறைமுகம் | 14,375 | 12,545 | 26,920 |
| நுரைச்சோலை துறைமுகம் | 66 | 64 | 130 |
| திருகோணமலைத் துறைமுகம் | 681 | 678 | 1,359 |
| இரத்மலானை விமான நிலையம் | 20 | 18 | 38 |
| யாழ்ப்பாணம் விமான நிலையம் | 0 | 0 | 0 |
| மொத்தம் | 598,881 | 509,701 | 1,108,582 |






**2) இலங்கைக்கு வருகைத்தந்த மற்றும் வெளியேறிய இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை மாதாந்தம் - 2021**

| மாதம் | வருகைதந்தோர் | | | வெளியேறியோர் | | |
|---|---|---|---|---|---|---|
| | இலங்கைப் பிரஜைகள் | வெளிநாட்ட வர்கள் | வருகைதந்த மொத்த எண்ணிக்கை | இலங்கைப் பிரஜைகள் | வெளிநாட்ட வர்கள் | வெளியேறிய மொத்த எண்ணிக்கை |
| ஜனவரி | 11,365 | 4,214 | 15,579 | 9,881 | 5,177 | 15,058 |
| பெப்ரவரி | 15,275 | 6,606 | 21,881 | 11,177 | 5,378 | 16,555 |
| மார்ச் | 20,521 | 8,632 | 29,153 | 13,375 | 7,198 | 20,573 |
| ஏப்ரல் | 26,424 | 8,683 | 35,107 | 14,327 | 7,971 | 22,298 |
| மே | 15,280 | 4,586 | 19,866 | 11,629 | 7,406 | 19,035 |
| ஜூன் | 24,779 | 3,897 | 28,676 | 7,560 | 5,037 | 12,597 |
| ஜூலை | 21,461 | 6,589 | 28,050 | 10,710 | 6,079 | 16,789 |
| ஆகஸ்ட் | 23,867 | 9,896 | 33,763 | 19,917 | 8,395 | 28,312 |
| செப்டம்பர் | 22,472 | 18,669 | 41,141 | 34,508 | 16,914 | 51,422 |
| ஒக்டோபர் | 40,868 | 29,547 | 70,415 | 46,796 | 21,935 | 68,731 |
| நவம்பர் | 51,665 | 52,124 | 103,789 | 55,527 | 41613 | 97,140 |
| டிசம்பர் | 70,758 | 100,703 | 171,461 | 73,827 | 67,364 | 141,191 |
| மொத்தம் | **344,735** | **254,146** | **598,881** | **309,234** | **200,467** | **509,701** |



3) இலங்கைக்கு வருகைத்தந்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை பிராந்தியங்களுக்கு அமைய - 2021

| மாதம் | ஆபிரிக்கா | ஆசியா | அவுஸ்திரேலியா | ஐரோப்பா | வட அமெரிக்கா | தென் அமெரிக்கா | அடையாளம் காணாத | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 46 | 1,655 | 66 | 2,305 | 136 | 2 | 4 | **4,214** |
| பெப்ரவரி | 52 | 3,588 | 80 | 2,583 | 291 | 11 | 1 | **6,606** |
| மார்ச் | 102 | 5,143 | 82 | 2,852 | 433 | 15 | 5 | **8,632** |
| ஏப்ரல் | 113 | 4,966 | 117 | 2,779 | 680 | 21 | 7 | **8,683** |
| மே | 48 | 2,373 | 68 | 1,708 | 369 | 16 | 4 | **4,586** |
| ஜூன் | 37 | 1,986 | 52 | 1,447 | 367 | 2 | 6 | **3,897** |
| ஜூலை | 85 | 3,197 | 75 | 2,447 | 775 | 1 | 9 | **6,589** |
| ஆகஸ்ட் | 102 | 4,532 | 96 | 3,878 | 1,255 | 15 | 18 | **9,896** |
| செப்டம்பர் | 117 | 14,366 | 67 | 3,448 | 641 | 16 | 14 | **18,669** |
| ஒக்டோபர் | 142 | 17,378 | 249 | 10,031 | 1,710 | 23 | 14 | **29,547** |
| நவம்பர் | 388 | 26,648 | 1,461 | 20,448 | 3,033 | 112 | 34 | **52,124** |
| டிசம்பர் | 816 | 40,393 | 4,401 | 49,106 | 5,729 | 222 | 36 | **100,703** |
| மொத்தம் | **2,048** | **126,225** | **6,814** | **103,032** | **15,419** | **456** | **152** | **254,146** |



## 4) இலங்கைக்கு வருகைதந்த இலங்கையர்களின் எண்ணிக்கை துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களுக்கு அமைய மாதாந்தம் - 2021

| துறைமுகம் / விமான நிலையம் | ஜனவரி | பெப்ரவரி | மார்சு | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் | 10,488 | 14,185 | 19,718 | 26,028 | 15,017 | 24,503 | 21,220 | 23,557 | 22,194 | 40,617 | 51,325 | 70,464 | **339,316** |
| ஹம்பாந்தோட்டை துறைமுகம் | 6 | 177 | 0 | 3 | 0 | 0 | 1 | 1 | 0 | 3 | 8 | 13 | **212** |
| மத்தளை விமான நிலையம் | 593 | 688 | 557 | 137 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **1975** |
| கொழும்புத் துறைமுகம் | 51 | 73 | 70 | 100 | 55 | 85 | 52 | 135 | 34 | 42 | 153 | 85 | **935** |
| காலித் துறைமுகம் | 227 | 143 | 174 | 156 | 203 | 189 | 164 | 171 | 232 | 202 | 171 | 169 | **2,201** |
| நுரைச்சோலை துறைமுகம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **0** |
| திருகோணமலைத் துறைமுகம் | 0 | 9 | 2 | 0 | 5 | 2 | 24 | 3 | 12 | 4 | 8 | 11 | **80** |
| இரத்மலானை விமான நிலையம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 16 | **16** |
| யாழ்ப்பாண விமான நிலையம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **0** |
| மொத்தம் | 11,365 | 15,275 | 20,521 | 26,424 | 15,280 | 24,779 | 21,461 | 23,867 | 22,472 | 40,868 | 51,665 | 70,758 | 344,735 |

## 5) இலங்கைக்குவருகைதந்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களுக்கு அமைய மாதாந்தம் - 2021

| துறைமுகம் / விமான நிலையம் | ஜனவரி | பெப்ரவரி | மார்சு | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் | 1,476 | 2,937 | 5,052 | 6,275 | 2,427 | 2,157 | 4,379 | 7,701 | 15,705 | 26,627 | 50,057 | 97,781 | **222,574** |
| ஹம்பாந்தோட்டை துறைமுகம் | 26 | 24 | 65 | 24 | 20 | 1 | 0 | 14 | 9 | 7 | 25 | 36 | **251** |
| மத்தளை விமான நிலையம் | 2,011 | 2,968 | 2,443 | 1,296 | 905 | 656 | 891 | 868 | 1,350 | 1,423 | 355 | 830 | **15,996** |
| கொழும்புத் துறைமுகம் | 14 | 26 | 54 | 143 | 276 | 180 | 153 | 247 | 253 | 319 | 388 | 427 | **2,480** |
| காலி துறைமுகம் | 687 | 651 | 1,018 | 927 | 920 | 821 | 1,066 | 969 | 1,211 | 1,111 | 1,221 | 1,572 | **12,174** |
| நுரைச்சோலை துறைமுகம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 23 | 10 | 10 | 23 | **66** |
| திருகோணமலைத் துறைமுகம் | 0 | 0 | 0 | 18 | 38 | 82 | 100 | 97 | 118 | 50 | 68 | 30 | **601** |
| இரத்மலானை விமான நிலையம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 4 | **4** |
| யாழ்ப்பாணம் விமான நிலையம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **0** |
| மொத்தம் | 4,214 | 6,606 | 8,632 | 8,683 | 4,586 | 3,897 | 6,589 | 9,896 | 18,669 | 29,547 | 52,124 | 100,703 | 254,146 |

## 6) இலங்கையிலிருந்து வெளியேறிய இலங்கையர்களின் எண்ணிக்கை துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களுக்கு அமைய மாதாந்தம் - 2021

| துறைமுகம் / விமான நிலையம் | ஜன வரி | பெப்ர வரி | மார்சு | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூ லை | ஆகஸ்ட் | செப்ட ம்பர் | ஒக் டோ பர் | நவம் பர் | டிசம் பர் | மொத் தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் | 9,619 | 10,731 | 13,061 | 14,059 | 11,267 | 7,227 | 10,293 | 19,431 | 34,111 | 46,417 | 55,190 | 73,573 | **304,979** |
| ஹம்பாந்தோட்டை துறைமுகம் | 6 | 1 | 6 | 0 | 7 | 0 | 0 | 1 | 0 | 2 | 8 | 15 | **46** |
| மத்தளை விமான நிலையம் | 20 | 0 | 11 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 4 | 0 | 0 | **36** |
| கொழும்புத் துறைமுகம் | 50 | 237 | 64 | 75 | 104 | 65 | 86 | 180 | 72 | 80 | 168 | 67 | **1,248** |
| காலித் துறைமுகம் | 178 | 207 | 231 | 192 | 247 | 245 | 304 | 238 | 290 | 288 | 152 | 141 | **2,713** |
| நுரைச்சோலை துறைமுகம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **0** |
| திருகோணமலைத் துறைமுகம் | 8 | 1 | 2 | 1 | 4 | 23 | 27 | 67 | 34 | 5 | 9 | 17 | **198** |
| இரத்மலானை விமான நிலையம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 14 | **14** |
| யாழ்ப்பாணம் விமான நிலையம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **0** |
| **மொத்தம்** | **9,881** | **11,177** | **13,375** | **14,327** | **11,629** | **7,560** | **10,710** | **19,917** | **34,508** | **46,796** | **55,527** | **73,827** | **309,234** |

## 7) இலங்கையிலிருந்து வெளியேறிய வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களுக்கு அமைய மாதாந்தம் - 2021

| துறைமுகம் / விமான நிலையம் | ஜன வரி | பெப்ர வரி | மார்சு | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூ லை | ஆக ஸ்ட் | செப்ட ம்பர் | ஒக் டோ பர் | நவம் பர் | டிசம் பர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் | 2,622 | 2,047 | 3,840 | 5,421 | 5,536 | 3,546 | 4,196 | 6,484 | 14,405 | 19,330 | 39,658 | 64,767 | **171,852** |
| ஹம்பாந்தோட்டை துறைமுகம் | 12 | 1 | 20 | 21 | 10 | 1 | 0 | 40 | 20 | 5 | 42 | 61 | **233** |
| மத்தளை விமான நிலையம் | 1,917 | 2,394 | 2,578 | 1,627 | 756 | 732 | 978 | 874 | 1,251 | 1,321 | 381 | 476 | **15,285** |
| கொழும்புத் துறைமுகம் | 31 | 427 | 37 | 111 | 458 | 96 | 81 | 192 | 174 | 255 | 350 | 505 | **2,717** |
| காலி துறைமுகம் | 595 | 509 | 722 | 775 | 575 | 616 | 756 | 716 | 976 | 979 | 1,109 | 1,504 | **9,832** |
| நுரைச்சோலை துறைமுகம் | 0 | 0 | 0 | 0 | 32 | 0 | 0 | 0 | 0 | 0 | 10 | 22 | **64** |
| திருகோணமலைத் துறைமுகம் | 0 | 0 | 1 | 16 | 39 | 46 | 68 | 89 | 88 | 45 | 63 | 25 | **480** |
| இரத்மலானை விமான நிலையம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 4 | **4** |
| யாழ்ப்பாணம் விமான நிலையம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **0** |
| மொத்தம் | 5,177 | 5,378 | 7,198 | 7,971 | 7,406 | 5,037 | 6,079 | 8,395 | 16,914 | 21,935 | 41,613 | 67,364 | 200,467 |

8) இலங்கைக்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட வெளிநாட்டவர்கள் (Refused entry ) - 2021

| நாடு | இலங்கைக்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட வெளிநாட்டவர்கள் |
|---|---|
| பங்களாதேஷ் | 02 |
| இந்தியா | 22 |
| ஈரான் | 01 |
| பாகிஸ்தான் | 10 |
| சீனா | 03 |
| லெபனான் | 01 |
| ஆப்கானிஸ்தான் | 03 |
| ரஷ்யா | 01 |
| இந்தோனேஷியா | 01 |
| அமெரிக்கா | 02 |
| ஜேர்மன் | 02 |
| பிரித்தானியா | 01 |
| மாலைத்தீவு | 03 |
| கனடா | 01 |
| நேபாளம் | 02 |
| தாய்லாந்து | 02 |
| நெதர்லாந்து | 01 |
| எகிப்து | 02 |
| உஸ்பகிஸ்தான் | 02 |
| கிரிகிஸ்தான் | 01 |
| சவூதி அரேபியா | 04 |
| ஜப்பான் | 01 |
| தென் ஆபிரிக்கா | 02 |
| அயர்லாந்து | 01 |
| டொமினிக்கன் | 01 |
| மொத்தம் | 72 |

9) 2021 ஆம் ஆண்டில் துரித பொதி சேவைக்கு (கூரியர்) அனுமதி வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டுத் தூதரங்கள் ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட கடவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை

| மாதம் | கூரியர் செய்யப்பட்ட அளவு | வருமானம் (அலகுப் பெறுமதி ரூ :1150.00) |
|---|---|---|
| ஜனவரி | 152 | 174,800 |
| பெப்ரவரி | 290 | 333,500 |
| மார்ச் | 325 | 373,750 |
| ஏப்ரல் | 190 | 218,500 |
| மே | 123 | 141,450 |
| ஜூன் | 230 | 264,500 |
| ஜூலை | 409 | 470,350 |
| ஆகஸ்ட் | 524 | 602,600 |
| செப்டம்பர் | 391 | 449,650 |
| ஒக்டோபர் | 402 | 462,300 |
| நவம்பர் | 305 | 350,750 |
| டிசம்பர் | 393 | 451,950 |
| மொத்தம் | **3734** | **4,294,100** |



10) கடவுச் சீட்டுக்களை கூரியர் செய்தல் மூலம் வருமானம் 2014 – 2021

| வருடம் | கூரியர் செய்யப்பட்ட அளவு | வருமானம் (அலகுப் பெறுமதி ரூ:1000.00 / ரூ:1150.00) |
|---|---|---|
| 2014 | 26,286 | 26,286,000 |
| 2015 | 28,820 | 28,820,000 |
| 2016 | 30,676 | 30,676,000 |
| 2017 | 30,529 | 30,529,000 |
| 2018 | 26,718 | 26,718,000 |
| 2019 | 19,334 | 20,376,650 |
| 2020 | 2,422 | 2,785,300 |
| 2021 | 3734 | 4,294,100 |
| மொத்தம் | **168,519** | **170,485,050** |




11) இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட துறைமுகமொன்றில் நங்கூரமிடப்பட்டுள்ள கப்பலொன்றின் பணியாட் தொகுதிக்கு தற்காலிகமாக தரைக்கு வருவதற்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல்.

| துறைமுகம் | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்புத் துறைமுகம் | 91,122 | 86,753 | 88,158 | 61,664 | 68,844 | 6,941 | 28 | 403,510 |
| காலி துறைமுகம் | 2,177 | 2,269 | 1341 | 1,596 | 1,246 | 69 | 0 | 8,698 |
| நுரைச்சோலை துறைமுகம் | -- | -- | -- | 209 | 248 | 86 | 0 | 543 |
| திருகோணமலைத் துறைமுகம் | 105 | 0 | 0 | 2,334 | 1,733 | 315 | 0 | 4,487 |
| ஹம்பாந்தோட்டை துறைமுகம் | -- | -- | -- | 345 | 589 | 106 | 12 | 1,052 |
| மொத்தம் | 93,404 | 89,022 | 89,499 | 66,148 | 72,660 | 7,517 | 40 | 418,290 |

12) வெளிநாட்டு கப்பல்துறை பணியாட்களுக்கு பிணைமுறி (ஸ்ரிகர்) விநியோகித்தல்.
மாதாந்த வருமானம் - 2021

| மாதம் | விநியோகிக்கப்பட்ட ஸ்ரிகர்கள் | வருமானம் (அலகுப் பெறுமதி ரூ:1150.00) |
|---|---|---|
| ஜனவரி | 1,047 | 1,204,050 |
| பெப்ரவரி | 1,420 | 1,633,000 |
| மார்ச் | 1,735 | 1,995,250 |
| ஏப்ரல் | 2,273 | 2,613,950 |
| மே | 3,405 | 3,915,750 |
| ஜூன் | 1,465 | 1,684,750 |
| ஜூலை | 1,802 | 2,072,300 |
| ஆகஸ்ட் | 3,161 | 3,635,150 |
| செப்டம்பர் | 2,470 | 2,840,500 |
| ஒக்டோபர் | 3,490 | 4,013,500 |
| நவம்பர் | 3,194 | 3,673,100 |
| டிசம்பர் | 3,505 | 4,030,750 |
| மொத்தம் | **28,967** | **33,312,050** |



13) பிணைமுறி (ஸ்ரிகர்) விநியோகம் 2014 – 2021

| வருடம் | விநியோகிக்கப்பட்ட ஸ்ரிகர்கள் | வருமானம் (அலகுப் பெறுமதி ரூ:1000.00 / ரூ:1150.00) |
|---|---|---|
| 2014 | 46,194 | 46,194,000 |
| 2015 | 44,841 | 44,841,000 |
| 2016 | 35,573 | 35,573,000 |
| 2017 | 37,532 | 37,532,000 |
| 2018 | 38,173 | 38,173,000 |
| 2019 | 34,941 | 37,179,000 |
| 2020 | 24,881 | 28,613,150 |
| 2021 | 28,967 | 33,312,050 |
| மொத்தம் | 291,102 | 301,417,200 |




14) வெளிநாட்டுக்குச் சென்ற பயணிகளின் குடிவரவு, குடியகல்வுத் தகவல்கள் அடங்கிய கடிதங்களை பல்வேறுபட்ட நிறுவனங்களின் தேவைக்கேற்ப வழங்குதல் - 2016 – 2021

| வருடம் | கடிதங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2016 | 6483 |
| 2017 | 5672 |
| 2018 | 4884 |
| 2019 | 3431 |
| 2020 | 723 |
| 2021 | 1,921 |

15) இலங்கைக்கு இலத்திரனியல் பயண அனுமதி (ETA ) இன்றி வருகைத்தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு விமான நிலையங்களில் இலத்திரனியல் பயண அனுமதியை (ETA ) வழங்குதல்

| | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|---|---|
| கட்டுநாயக்க விமான நிலையம் | 443748 | 448811 | 407964 | 428775 | 635054 | 115692 | 13,081 |

### 2.1.2.3 புலனாய்வுக் கிளை

1) 2021 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுக்கு அமைய நாட்டிலிருந்து வெளியேற்றப் பட்ட வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை

| மாதம் | புலானாய்வுகளின் எண்ணிக்கை | வெளியேற்றப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| ஜனவரி | 50 | 41 |
| பெப்ரவரி | 38 | 16 |
| மார்ச் | 191 | 11 |
| ஏப்ரல் | 19 | 6 |
| மே | 18 | 0 |
| ஜூன் | 4 | 1 |
| ஜூலை | 16 | 1 |
| ஆகஸ்ட் | 2 | 1 |
| செப்டம்பர் | 12 | 17 |
| ஒக்டோபர் | 16 | 1 |
| நவம்பர் | 45 | 21 |
| டிசம்பர் | 94 | 14 |
| மொத்தம் | **505** | **130** |

2) நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட வெளிநாட்டவர்கள் நாடுகளுக்கு அமைய **(2021.01.01 முதல் 2021.12.31 வரை)**

| | தேசியம் | 2021 |
|---|---|---|
| 1 | இந்தியா | 92 |
| 2 | நேபாளம் | 09 |
| 3 | நைஜீரியா | 07 |
| 4 | பகிஸ்தான் | 06 |
| 5 | ரஷ்யா | 05 |
| 6 | மாலைத்தீவு | 02 |
| 7 | ஹொன்டுராஸ் | 02 |
| 8 | சீனா | 01 |
| 9 | யுக்ரேன் | 01 |
| 10 | கொரியா | 01 |
| 11 | சூடான் | 01 |
| 12 | பங்களாதேஷ் | 01 |
| 13 | தென் ஆபிரிக்கா | 01 |
| 14 | உகண்டா | 01 |
| | மொத்தம் | **130** |

3) புலனாய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை 2016 - 2021

| மாதம் | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 73 | 36 | 99 | 210 | 172 | 50 |
| பெப்ரவரி | 43 | 64 | 124 | 190 | 85 | 38 |
| மார்ச் | 50 | 89 | 166 | 337 | 49 | 191 |
| ஏப்ரல் | 72 | 48 | 126 | 209 | 3 | 19 |
| மே | 46 | 75 | 49 | 236 | 49 | 18 |
| ஜூன் | 56 | 56 | 119 | 162 | 58 | 4 |
| ஜூலை | 77 | 72 | 157 | 131 | 24 | 16 |
| ஆகஸ்ட் | 89 | 112 | 72 | 90 | 47 | 2 |
| செப்டம்பர் | 109 | 88 | 113 | 140 | 39 | 12 |
| ஒக்டோபர் | 57 | 29 | 233 | 63 | 10 | 16 |
| நவம்பர் | 61 | 82 | 316 | 116 | 2 | 45 |
| டிசம்பர் | 23 | 42 | 192 | 81 | 18 | 94 |
| மொத்தம் | **756** | **793** | **1766** | **1965** | **556** | **505** |




4) 2018 முதல் 2021 வரை மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகளுக்கு அமைய நாட்டிலிருந்து வெளியேற்றப் பட்டவர்களின் எண்ணிக்கை 2018-2021

| வருடம் | நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2018 | 678 |
| 2019 | 898 |
| 2020 | 249 |
| 2021 | 130 |
| மொத்தம் | **1955** |

**அகதிகள் அந்தஸ்து கோரியுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையாளர் அலுவலகத்தில் (UNHCR) பதிவு செய்தல் பற்றிய தரவுகள்**

5) 2021.12.31 ஆம் திகதிக்கு அகதிகள் அந்தஸ்து கோரியுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை (Asylum Seekers) –

| | நாட்டவர் | ஆட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | ஆப்கானிஸ்தான் | 27 |
| 02 | பங்களாதேஷ் | 02 |
| 03 | ஈரான் | 02 |
| 04 | இந்தியா | 02 |
| 05 | ஈராக் | 02 |
| 06 | மாலைத்தீவு | 03 |
| 07 | நைஜீரியா | 08 |
| 08 | பாகிஸ்தான் | 149 |
| 09 | பலஸ்தீன் | 03 |
| 10 | சூடான் | 05 |
| 11 | சிரியா | 02 |
| 12 | யெமன் | 03 |
| | **மொத்தம்** | **208** |



6) 2021.12.31 ஆம் திகதிக் அகதிகள் பிரிவின் மேற்பார்வையின் கீழ் அகதிகள் அந்தஸ்துபெற்று இலங்கையில் தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை (Refugees) –

| | நாட்டவர் | ஆட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | ஆப்கானிஸ்தான் | 113 |
| 02 | பங்களாதேஷ் | 01 |
| 03 | எரித்தியா | 01 |
| 04 | இந்தியா | 01 |
| 05 | ஈரான் | 24 |
| 06 | மாலைதீவு | 02 |
| 07 | மியன்மார் | 35 |
| 08 | பாகிஸ்தான் | 709 |
| 09 | பலஸ்தீன் | 06 |
| 10 | சோமாலியா | 01 |
| 11 | சூடான் | 04 |
| 12 | யெமன் | 15 |
| | மொத்தம் | 912 |



7) இடர் மதிப்பீட்டு நிலையத்தின் (RISK ASSESSMENT CENTER ) மூலம் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் மற்றும் அதற்கமைய நாட்டுக்குள் நுழைவதற்கு இடமளிக்கப்படாத ஆபத்துள்ள நபர்களின் எண்ணிக்கை

| நாடு | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை | அபாய எண்ணிக்கை |
|---|---|---|
| பாகிஸ்தான் | 3000 | 144 |
| ஆப்கானிஸ்தான் | 146 | 50 |
| நேபாளம் | 70 | 27 |
| உஸ்பகிஸ்தான் | 32 | 01 |
| மொத்தம் | **3248** | **222** |

8) 2021 ஆம் ஆண்டில் வெளிநாட்டவர் தடுப்பு நிலையத்தின் சாராம்சம் (வெலிசரை மற்றும் மிரிஹான) (DETENTION CENTERS ) தடுத்துவைக்கப்பட்ட வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை (நாடு அடிப்படையில்)

| | நாடு | தடுத்துவைக்கப்பட்ட வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சீனா | 04 |
| 02 | இந்தியா | 27 |
| 03 | மொசம்பிக் | 01 |
| 04 | மாலைதீவு | 03 |
| 05 | நேபாளம் | 09 |
| 06 | நைஜீரியா | 07 |
| 07 | பாகிஸ்தான் | 02 |
| 08 | ரஷ்யா | 02 |
| 09 | யுக்ரேன் | 04 |
| 10 | சோமாலியா | 05 |
| 11 | சூடான் | 01 |
| 12 | தாய்லாந்து | 02 |
| | மொத்தம் | **67** |

அகற்றப்பட்ட வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை (நாடு அடிப்படையில்)

| | நாடு | வெளியேற்றப்பட்ட வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சீனா | 01 |
| 02 | இந்தியா | 25 |
| 03 | மொசம்பிக் | 01 |
| 04 | மாலைதீவு | 04 |
| 05 | நேபாளம் | 11 |
| 06 | நைஜீரியா | 07 |
| 07 | பாகிஸ்தான் | 05 |
| 08 | ரஷ்யா | 02 |
| 09 | யுக்ரேன் | 04 |
| 10 | தென் ஆபிரிக்கா | 01 |
| 11 | சூடான் | 01 |
| 12 | யெமன் | 01 |
| | **மொத்தம்** | **63** |

1) எல்லைக் கண்காணிப்பு பிரிவினால் (BSU) 2021 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகளின் எண்ணிக்கை

| இலக்கம் | நிறுவனம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு சரணடைதல் | 46 |
| 02 | குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவித்தல் | 15 |
| 03 | விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு முன்னிலைப்படுத்தல் | 08 |
| 04 | வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு முன்னிலைப்படுத்தல் | 04 |
| 05 | நாட்டுக்கு நுழைவதை தடுத்து மீண்டும் திருப்பி அனுப்புதல் | 01 |
| 06 | செல்லுபடியாகும் வீசா அனுமதிப்பத்திரம் இன்றி வெளிநாடு செல்வதை தடுத்தல் | 02 |
| 07 | இருப்பிடமொன்றை வழங்குவதற்காக குடிப்பெயர்வாளர்கள் பற்றிய சர்வதேச அமைப்பிடம் ஒப்படைத்தல் | 01 |

## 2.1.3 கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புப் பிரிவு

### 2.1.3.1 இந்திய – இலங்கை பிரஜைகள் கிளை

**பதிவு பற்றிய தகவல்களை உறுதிப்படுத்தும் கடிதங்களை வழங்குதல் 2017 – 2021**

| சட்டம் | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| 1949 இல. 03 | 29 | 20 | 18 | 24 | 29 |
| 1967 இல. 14 | 30 | 10 | 13 | 16 | 25 |
| 1988 இல. 39 | 24 | 13 | 10 | 09 | 14 |
| 2003 இல. 35 | - | 01 | - | 01 | - |




### 2.1.3.2 கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புப் பிரிவு

**2021 வருடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட மூலதனக் கருத்திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்**

| | கருத்திட்டம் | ஒதுக்கீடு (ரூ.மில்.) | நிதிச் செலவு (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் (%) | பௌதீக முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|---|
| 1 | 7 ஆம் மாடியில் கேட்போர் கூடத்தை புனரமைத்தல் | 3.10 | 3.04 | 98 | 100% |
| 2 | வெளிநாட்டவர்களை தடுத்து வைப்பதற்கான நிலையத்தை வெலிசரையில் அமைந்துள்ள மிகவும் வசதிகள் கூடிய இடத்திற்கு கொண்டு செல்லல் (கட்டம் 1) | 5.59 | 5.50 | 98 | 100% |
| 3 | புதிய தடுப்பு நிலையத்தின் அலுவலக அறையையும் பாதுகாப்பு கூடத்தையும் நிர்மாணித்தல் (கட்டம் 2) | 2.46 | 2.42 | 98 | 100% |
| 4 | வவுனியா ஓய்வறையை புனரமைத்தல் | 0.46 | 0.42 | | 100% |

| | கருத்திட்டம் | ஒதுக்கீடு (ரூ.மில்.) | நிதிச் செலவு (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் (%) | பௌதீக முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|---|
| 5 | பிரதிக் கட்டுப்பாட்டாளர் (தகவல் தொழில்நுட்பம்) அலுவலக வசதிகளை வழங்குதல் | 0.57 | 0.10 | 91 | 100% |
| 6 | தடுப்பு நிலையத்தின் உத்தேச காணியைச் சுற்றி வேலி அமைத்தல் | 1.36 | 1.32 | 97 | 100% |
| 7 | ரத்மலானை விமான நிலையத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வு அலுவலக வளாகத்தை மறுசீரமைத்தல் | 1.40 | _ | _ | 70% |
| 8 | புலனாய்வுப் பிரிவின் அறைகளை வேறாக்குதல் | 0.42 | 0.42 | 100 | 100% |
| 9 | 5 ஆம் மாடியின் புனரமைப்பு நடவடிக்கைகள் | 0.18 | 0.17 | 94 | 100% |
| 10 | எண்ணியல் அறிக்கைகளை தயாரிக்கும் அலகிற்காக அலுவலக வசதிகளை செய்தல் | 0.24 | 0.22 | 91 | 100% |
| 11 | இயந்திர சாதனங்களை பழுதுபார்த்தல் | 2.00 | 0.56 | 28 | 28% |
| 12 | வாகனப் பழுதுபார்ப்பு | 4.00 | 3.95 | 99 | 100% |
| 13 | அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல் | 6.00 | 3.57 | 60 | 60% |
| 14 | கணினி மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல் | 7.90 | 4.57 | 58 | 58% |
| 15 | கடவுச்சீட்டு வருடியெடுப்பு இயந்திரங்கள் 65 ஐ கொள்வனவு செய்தல் | 19.40 | 19.30 | 99 | 100% |
| 16 | இணையவழி துணைத் தொகுதிக்கு fiirwall கொள்வனவு செய்தல் | 7.70 | 7.50 | 97 | 100% |
| 17 | பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புதிய வெளியேறும் தளத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் | 9.00 | 7.50 | 83 | 100% |
| 18 | எண்ணியல் அறிக்கைகளை தயாரிப்பதற்காக மென்பொருள் அபிவிருத்தி | 15.80 | 14.75 | 93 | 100% |
| 19 | புலனாய்வுப் பிரிவுக்குரிய மென்பொருள் அபிவிருத்தி | 35.20 | 35.00 | 99 | 100% |
| 20 | இணையவழியில் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் மென்பொருள் அபிவிருத்தி | 22.90 | 21.50 | 94 | 100% |
| 21 | குடியுரிமைப் பிரிவுக்குரிய மென்பொருள் அபிவிருத்தி | 29.60 | 29.50 | 99 | 100% |
| 22 | உரிய திகதிக்கு வீசாக் காலம் முடிவடைந்து தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களை அடையாளம் காண்பதற்கு முடியுமான கணினி மென்பொருள் அபிவிருத்தி | 4.20 | 4.12 | 98 | 100% |
| 23 | உரிய திகதிக்கு எல்லைப் பாதுகாப்பு அலகுக்கு (BSU ) ஏற்புடைய மென்பொருள் அபிவிருத்தி | 17.30 | 16.28 | 94 | 100% |
| 24 | ஆளணிப் பயிற்சி | 2.22 | 2.07 | 93 | 100% |
| 25 | வெற்றுக் கடவுச்சீட்டு அச்சிடலுக்கான பாகங்களை கொள்வனவு செய்தல் | 1,000 | 767.80 | 77 | 100% |
| 26 | on arrival visa strikers கொள்வனவு | 11.50 | 11.48 | 99 | 100% |
| | | 1,210.50 | 963.06 | 80% | 93% |

## 2.1.4 தகவல் தொழில்நுட்பப் பிரிவு

1) **இணைந்த தகவல் முகாமைத்துவப் பிரிவு (IEMS) மூலம் பதில் அளிக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பான தகவல்கள்**

| இலக்கம் | நிறுவனம் | மொத்தம் |
|---|---|---|
| 01 | ஜேர்மன் தூதுவராலயம் | 03 |
| 02 | நெதர்லாந்து தூதுவராலயம் | 01 |
| 03 | அமெரிக்க தூதுவராலயம் | 12 |
| 04 | அவுஸ்திரேலியா உயர்ஸ்தானிகர் ஆலயம் | 06 |
| 05 | குடிபெயர்வாளர்களுக்கான சர்வதேச அமைப்பு | 01 |
| 06 | ஐக்கிய இராச்சிய உயர்ஸ்தானிகர் ஆலயம் | 106 |
| 07 | இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவு | 68 |
| 08 | இலங்கை உயர்ஸ்தானிகர் ஆலயம் பிரித்தானியா | 70 |
| 09 | நோர்வே தூதுவராலயம் | 01 |
| | மொத்தம் | **268** |

2) **மீண்டும் பொறுப்பேற்கும் பிரச்சினை முகாமைத்துவத் தொகுதி (RCMS ) ஊடாக திணைக்களத்தின் மூலம் தற்காலிகமாக சிபாரிசு செய்யப்பட்டுள்ள பயண ஆவணங்கள் மற்றும் அதற்கமைய இலங்கை தூதரகங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள தற்காலிக பயண ஆவணங்கள் தொடர்பான தகவல்கள்**

| நாடு | இலங்கை தூதரகத்தினால் விநியோகிக்கப்பட்ட எண்ணிக்கை - 2021.12.31 |
|---|---|
| அவுஸ்திரேலியா | 88 |
| ஆஸ்திரியா | 03 |
| பெல்ஜியம் | 02 |
| கனடா | 03 |
| சீனா | 16 |
| எகிப்து | 15 |
| பிரான்ஸ் | 60 |
| ஜேர்மன் | 215 |
| இந்தோனேஷியா | 04 |
| இத்தாலி | 39 |
| குவைட் | 2146 |
| நேபாளம் | 06 |
| நெதர்லாந்து | 08 |

| நாடு | இலங்கை தூதரகத்தினால் விநியோகிக்கப்பட்ட எண்ணிக்கை - 2021.12.31 |
|---|---|
| ஓமான் | 139 |
| போலாந்து | 03 |
| கட்டார் | 131 |
| ருமேனியா | 05 |
| ரஷ்ய குடியரசு | 31 |
| சுவீடன் | 08 |
| சுவிட்சர்லாந்து | 298 |
| தாய்லாந்து | 11 |
| துருக்கி | 12 |
| ஐக்கிய இராச்சியம் | 26 |
| ஐக்கிய அமெரிக்கா | 02 |
| **மொத்தம்** | 3271 |

## 2.1.5 குடியுரிமைப் பிரிவு

1) குடியுரிமைச் சட்டத்திற்கு அமைய விநியோகிக்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை - 2021

| பிரிவு | விநியோகிக்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை | விநியோகிக்கப்பட்ட சான்றிதழ் பிரதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 5 (2) ஆம் பிரிவு | 7278 | 16602 |
| 8 ஆம் பிரிவு | 12 | 1 |
| 11 ஆம் பிரிவு | 146 | 42 |
| 12 ஆம் பிரிவு | 19 | 6 |
| 19(2)/ 19(3) பிரிவுகள் | 5401 | 4654 |
| 20 ஆம் பிரிவு | 134 | 196 |
| **மொத்தம்** | **12990** | **21501** |

- முன்னைய ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களுக்கு 2021 ஆம் ஆண்டில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 2) இரட்டைக் குடியுரிமையை வழங்குதல் - 2021

| விபரம் | விநியோகிக்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|
| குடியுரிமைச் சட்டத்தின் 19(2) ஆம் பிரிவின் கீழ் இலங்கையின் குடியுரிமையை மீண்டும் பெற்றுக்கொள்ளல். | 2607 |
| குடியுரமைச் சட்டத்தின் 19(3) ஆம் பிரிவின் கீழ் இலங்கையின் குடியுரிமையை மீண்டும் பெற்றுக்கொள்ளல். | 2047 |
| **மொத்தம்** | **4654** |

## 3) இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் 2021.01.01 ஆம் திகதி முதல் 2021.12.31 ஆம் திகதிக்கு

| நாடு | இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தவர்கள் |
|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 795 |
| அவுஸ்திரேலியா | 1621 |
| ஐக்கிய இராச்சியம் | 885 |
| இத்தாலி | 288 |
| கனடா | 371 |
| சுவிட்சர்லாந்து | 100 |
| சுவீடன் | 10 |
| நியூசிலாந்து | 63 |
| பிரான்ஸ் | 127 |
| டென்மார்க் | 7 |
| வேறு | 1134 |
| மொத்தம் | **5401** |



இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக 5401 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. அவற்றில் 2021 ஆம் ஆண்டில் 4654 பேருக்கு இரட்டைக் குடியுரிமையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதாவது கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு அமைய இரட்டைக் குடியுரிமையை வழங்கப்பட்ட சதவீதம் 86.17% ஆகும்.

### 04. இ. – பயண அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு அமைய இ – பயண அனுமதி வழங்கப்பட்ட எண்ணிக்கையின் வீதம்

இ - பயண அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 242003 ஆகும். அவற்றில் 2021 ஆம் ஆண்டில் 234313 பேருக்கு இ – பயண அனுமதி வழங்கப்பட்டது. அதாவது கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு அமைய இ – பயண அனுமதி வழங்கப்பட்ட சதவீதம் 96.82% ஆகும்.

### 05. வருடாந்த இலக்கிற்கு அமைய வருமானம் ஈட்டும் சதவீதம்

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் முக்கிய வருமானக் கூறுகள் கடவுச்சீட்டுகளை வழங்குதல், வெளிநாட்டு தூதரகங்கள் மூலம் கடவுச்சீட்டுகளை வழங்குதல், குடியிருப்பு விசாக்களை வழங்குதல், இலத்திரனியல் பயண அனுமதிகளை வழங்குதல், குடியுரிமை மற்றும் இரட்டை குடியுரிமை சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் துறைமுகம் தொடர்பான நடவடிக்கைகள். கோவிட் 19 தொற்றுநோய்க்கு முகங்கொடுத்த நிலையில் 5.67 பில்லியன் ரூபா வருமானம் மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் 2021 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் எதிர்பார்க்காத அளவு

வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடிந்த காரணத்தினால் மொத்த வருமானம் 8.66 பில்லியன் ரூபா வரை அதிகரித்தது. அது 152.60% வருமான ஈட்டல் செயலாற்றுகையாகும். தொற்றுநோய் நிலவிய காலப் பகுதியிலும் தேசிய வருமானத்திற்கு பாரிய பங்களிப்பைச் செய்ய இயலுமாகியது.

| | 2021 ஆம் ஆண்டின் செயலாற்றுகை சுட்டிகள் | | | |
|---|---|---|---|---|
| | விசேட செயலாற்றுகை சுட்டிகள் | எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு | | |
| | | 90%-100% | 75%-89% | 50%-74% |
| | திணைக்களத்தின் பிரதான செயலாற்றுகை சுட்டிகள் | | | |
| 1 | ஒருநாள் சேவையின் கீழ் கிடைக்கப்பெற்ற கடவுச்சீட்டு விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு அமைய விநியோகிக்கப்பட்ட கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கை | √ | | |
| 2 | சாதாரண சேவையின் கீழ் பெறப்பட்ட கடவுச்சீட்டு விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு அமைய விநியோகிக்கப்பட்ட கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கை | | √ | |
| 3 | இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு அமைய வழங்கப்பட்ட இரட்டைக் குடியுரிமை சான்றிதழ்களின் எண்ணிக்கை | | √ | |
| 4 | இ – பயண அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட் விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு அமைய அனுமதி வழங்கப்பட்ட எண்ணிக்கை | √ | | |
| 5 | வருடாந்த இலக்கிற்கு அமைய வருமானம் ஈட்டும் சதவீதம் | √ | | |
| வருடாந்த செயல் திட்டத்திற்கு அமைய செயலாற்றுகை சுட்டிகள் | | | | |
| 1 | உரிய தினத்திற்கு இணைய வழியில் கடவுச்சீட்டுக்களைத் தயாரிப்பதற்கான முறையொன்றைத் தயாரித்தல் | √ | | |
| 2 | உரிய தினத்திற்கு 7 ஆம் மாடியின் கேட்போர் கூடத்தை புனரமைத்து நிறைவுசெய்தல் | √ | | |
| 3 | உரிய தினத்திற்கு அடையாளம் காணப்பட்ட வெலிசறையில் அமைந்துள்ள கூடுதல் வசதிகள் கொண்ட இடமொன்றுக்கு வெளிநாட்டவர்களை தடுத்துவைக்கும் நிலையத்தைக் கொண்டுசெல்லல். | √ | | |
| 4 | உரிய தினத்திற்கு புதிய தடுப்பு முகாம் நிர்மாணிக்கப்படவுள்ள காணியைச் சுற்றி வேலி அமைத்தல். | √ | | |
| 5 | உரிய தினத்திற்கு எண்ணிக்கை அளவிலான அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக மொடியூல் ஒன்றை வடிவமைத்தல். | √ | | |

| | 2021 ஆம் ஆண்டின் செயலாற்றுகை சுட்டிகள் | | | |
|---|---|---|---|---|
| | | எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு | | |
| | விசேட செயலாற்றுகை சுட்டிகள் | 90%-100% | 75%-89% | 50%-74% |
| 6 | உரிய முறையில் பழுதுபார்க்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை. | √ | | |
| 7 | உரிய தினத்திற்கு கடவுச்சீட்டு வருடி (ஸ்கேன்) இயந்திரங்கள் 65 ஐ விமான நிலையங்களில் நிறுவுதல். | √ | | |
| 8 | உரிய தினத்திற்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புதிய வெளியேறும் இடத்தைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகளை நிறைவுசெய்தல். | √ | | |
| 9 | உரிய தினத்திற்கு புலனாய்வுப் பிரிவுக்கு ஏற்புடைய மென்பொருள் அபிவிருத்திப் பணிகளை நிறைவுசெய்தல். | √ | | |
| 10 | உரிய தினத்திற்கு குடியுரிமைப் பிரிவுக்கு ஏற்புடைய மென்பொருளை அபிவிருத்தி செய்தல். | √ | | |
| 11 | உரிய தினத்திற்கு வீசா காலம் கடந்து தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களை அடையாளம் காண்பதற்கு ஏற்ற வகையில் கணினி மென்பொருளை அபிவிருத்தி செய்தல். | √ | | |
| 12 | உரிய தினத்திற்கு எல்லைப் பாதுகாப்பு பிரிவுக்கு (BSU) ஏற்புடைய மென்பொருளை அபிவிருத்தி செய்தல். | √ | | |
| 13 | ஆளணியின் இயலளவை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | √ | | |
| 14 | உரிய தினத்திற்கு வெளிநாட்டவர்களுக்காக பயன்படுத்தப்படும் வீசா ஸ்ரிகரை கொள்வனவு செய்தல். | √ | | |

# அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதற்கான செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடுக.

| ஏற்புடைய பிரதான உலகளாவிய நோக்கங்கள் | உலகளாவிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக நிறுவனம் திட்டமிட்ட இலக்குகள் | அந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்காக நிறுவனம் நோக்கமாகக் கொண்ட திட்டங்கள் | அந்தத் திட்டங்களுக்காக 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் | அந்த குறிகாட்டிகளுக்கு அமைய 2021 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 0%-49% | 50%-74% | 75%-100% |
| 16.சமாதானம் நியாயத்தை வலுவூட்டும் நிறுவனங்கள் | * ஆட்கடத்தல், மனித வியாபாரம் மற்றும் பயங்கரவாதத்தை தடுப்பதற்கான நிறுவனக் கட்டமைப்பு | * சர்வதேச பொலிஸ் IOM,UNODC போன்ற நிறுவனங்களுடன் திட்டங்களை வகுத்தல். | * தரவுத்தளத்தை சர்வதேச பொலிஸ், BRAC ( எல்லை அபாய மதிப்பீட்டு நிலையம்) போன்ற நிறுவனங்களுடன் தொடர்பைப் பேணுதல். | | | √ |
| | | | * சர்வதேச அமைப்புக்களுடன் இணைந்து சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளித்தல். | | | √ |
| | | | * பாதுகாப்பு அமைச்சின் ஆட்கடத்தல் வியாபாரத்தை தடுக்கும் செயலணியுடன் இணைந்து செயற்படல். | | | √ |
| | | * விசேட விடயங்களுடன் தொடர்புடைய பிரிவுகளை நிறுவுதல். | * புலனாய்வுப் பிரிவுக்கு ஏற்புடைய செயற்பாடுகளின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக மென்பொருளை அபிவிருத்தி செய்தல். | | | √ |
| | | | * பண்டாரநாயக்க விமான நிலையத்தில் எல்லை பாதுகாப்பு பிரிவு (BSU ) ஏற்புடைய மென்பொருள் கட்டமைப்பை மேம்படுத்தல். | | | √ |
| | *பொறுப்புக்கூறும் வகையிலும் வெளிப்படைத்தன் மையுடனும் பொதுமக்களுக்கு தரமான மற்றும் வினைத்திறன்மிக்க சேவையை வழங்குதல் | * கடவுச்சீட்டு விநியோகிப்பதற்கு வினைத்திறன்மிக்க புதிய தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தல் | * கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்காக இணைய வழிமுறையொன்றை அறிமுகம் செய்தல். | | | √ |

## 5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG)அடைவதற்கான செயலாற்றுகை

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதில் நிறுவனம் பெற்றுக்கொண்ட வெற்றிகள் (சுட்டிகள் அடிப்படையில் விபரிக்க.)
மேற்படி நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் மற்றும் அதற்கு ஏற்புடைய செயற்பாடுகளுக்கு அமைய பின்வரும் வெற்றிகளை பெற்றுக்கொள்ள முடியுமாகியது.

| செயலாற்றுகை சுட்டிகள் | செயற்பாடுகள் | முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|
| | | 0%-49% | 50%-74% | 75%-100% |
| குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தை மீறி இந்த நாட்டில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டுமென அடையாளம் காணப்பட்ட வெளிநாட்டவர்களை அகற்றும் நடவடிக்கையின் சதவீதம் | இது தொடர்பிலான 505 புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு அதற்கமைய 130 வெளிநாட்டவர்களை நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டுமென அடையாளம் காணப்பட்டது. அவர்கள் அனைவரும் 2021 ஆம் ஆண்டில் தத்தமது நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். | | | √ |
| தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய அபாயம்மிக்கவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகளை அடிப்படையாகக்கொண்டு நாட்டுக்குள் நுழைவதை தடுப்பது பொருத்தமென அடையாளம் காணப்பட்ட வெளிநாட்டவர்களில் இந்த நாட்டுக்குள் நுழைவதை விட்டும் தடுக்கப்பட்டவர்களின் சதவீதம். | நாட்டுக்குள் நுழைவதற்கு விண்ணப்பித்திருந்த வெளிநாட்டவர்கள் 3248 தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுக்கு அமைய 222 பேர் நாட்டுக்குள் நுழைவது ஆபத்தானதென அடையாளம் காணப்பட்டது. அந்த ஆபத்தானவர்கள் 222 பேருக்கும் நாட்டுக்குள் நுழைவதற்கு இடமளிக்கப்படவில்லை. | | | √ |
| ஆட்கடத்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகளுக்கு அமைய அடையாளம் காணப்பட்ட பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. அவ்வாறு நிவாரணம் அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட 102 புலனாய்வுகளுக்கு அமைய பாதிக்கப்பட்ட 22 பேர் அடையாளம் காணப்பட்டனர். அவர்கள் அனைவருக்கும் தேவையான உதவி வழங்கப்பட்டது. | | | √ |
| இணைய வழியில் வீசா நீடிக்கப்பட்ட எண்ணிக்கை | பொறுப்புடனும் வெளிப்படைத்தன்மையுடனும் பொதுமக்களுக்கு தரமான மற்றும் வினைத்திறன்மிக்க சேவையை வழங்கும் நோக்கில் சுற்றுலா வீசாக்களை இணைய வழியில் நீடித்துக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. | | | √ |

- சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நியம செயல்பாடுகளைப் பின்பற்றி அதிகாரிகளுக்கு எல்லைப் பாதுகாப்பு அலகு மற்றும் ஆட்கடத்தல் வியாபாரத்தை ஒழிக்கும் தேசிய வள நிலையத்திற்காக தயாரிக்கப்பட்ட நியம செயல்பாட்டு நடைமுறைகள் (SOPs ) இரண்டை உருவாக்கி செயல்படுத்துவதில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் திணைக்களம் நற்பெயர் பெற்றுள்ளது.

- மேலும் பொறுப்புடனும் வெளிப்படைத்தன்மையுடனும் பொதுமக்களுக்கு தரமான மற்றும் வினைத்திறன்மிக்க சேவையை வழங்கும் நோக்கில் இணைய வழியில் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் முறைமையொன்றை 2021 ஆம் ஆண்டில் தயாரித்தல் விசேட வெற்றியாக குறிப்பிட முடியும்.

- அவ்வாறே, 2021 ஆம் ஆண்டில் புலனாய்வுப் பிரிவில் மற்றும் எல்லைப் பாதுகாப்பு அலகின் செயற்பாடுகளை மேலும் முறைமைப்படுத்துவதற்காக மென்பொருட்களை விருத்தி செய்தல், வீசா காலம் கடந்து தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களை அடையாளம் காணும் பொருட்டு மென்பொருளொன்றை அபிவிருத்தி செய்தலும் விசேட செயற்பாடாகும். \

### அந்த சாதனைகளை அடைவதற்கான நிறுவனத்தின் பலம் மற்றும் வாய்ப்புகள்

**பலம்**

- அர்ப்பணிப்புள்ள அதிகாரிகளின் முனைப்பான பங்களிப்பு.

- திணைக்களத்தில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பயிற்சி அதிகாரிகள் இருத்தல் மற்றும் அவர்களின் வழிகாட்டுதலில் ஏனைய அதிகாரிகளை பயிறுவித்தல்.

- வலுவான நிறுவன கட்டமைப்பை உருவாக்க முடியுமாதல்.

- செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்காக புதிய மென்பொருட்களை அபிவிருத்தி செய்ய முடியுமாதல்.

**வாய்ப்புக்கள்**

- சர்வதேச நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு மூலம் செயல்பாடுகளை நிறைவேற்றிக்கொள்ள முடியுமாதல்.

- சர்வதேச அளவில் கட்டமைக்கப்பட்ட வலையமைப்பு மூலம் புலனாய்வுத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.

### வெற்றிகளை அடைந்துகொள்வதற்கு நிறுவனம் முகம்கொடுத்த சவால்கள்

- கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக செற்பாடுகளுக்கு தடை ஏற்படல்.

- ஆட்கடத்தல் வியாபாரம் தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்ததன் பின்னர் சந்தேக நபர்கள் தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைப் பெறுவதில் சிரமம் காணப்படுதல்.

- வழக்கு விசாரணைக்கு நீண்ட காலம் எடுப்பதன் காரணமாக பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து ஒத்துழைப்பு இல்லாமை.

- சுற்றுலா ஊக்குவிப்பு மற்றும் சட்ட அமுலாக்கல் நிறுவனங்களுக்கு இடையில் மோதல் சூழ்நிலை காரணமாக சட்ட அமலாக்கத்தை மேம்படுத்துவதில் சிரமம். (உதா- சுற்றுலாப் பயணிகளாக வருவதன் மூலம் விசா நிபந்தனைகளை மீறும் பாகிஸ்தான் மற்றும் உஸ்பகிஸ்தான் நாட்டவர்கள்.)

- வெளிநாட்டு வேலைவாய்ப்பு உப முகவர்களின் (sub-agents) நடவடிக்கைகள் காரணமாக முறையற்ற குடிப்பெயர்வைக் கட்டுப்படுத்த சிரமம் ஏற்படுவதனால் இலங்கைப் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளில் பாதிக்கப்படுதல்.

- வெளிநாட்டவர்கள் நாட்டுக்குள் நுழைந்த பின்னர் அவர்கள் இருக்கும் இடங்களை சரியாக மற்றும் துரிதமாக அடையாளம் காணும் முறைமையொன்று இல்லாமை.

# அத்தியாயம் 06 - மனித வள விபரம்

## 6.1 பதவியணி முகாமைத்துவம்

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | வெற்றிடங்கள்/ (மேலதிகம்)** |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 67 | 51 | 16 |
| மூன்றாம் மட்டம் | 527 | 409 | 118 |
| இரண்டாம் மட்டம் | 539 | 419 | 120 |
| ஆரம்ப மட்டம் | 159 | 137 | 22 |
| **மொத்தம்** | **1292** | **1016** | வெற்றிடங்கள் 276 ( மிகை 2) |

- அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் 02 மிகையாக காணப்படுகின்றன.

திணைக்களத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் என்ற வகையிலும் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையிலும் திணைக்களத்தின் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் வழிநடாத்தல் மற்றும் மேற்பார்வையின் கீழ் மேலதிக கட்டுப்பாட்டாளர் நாயகம், 05 கட்டுப்பாட்டாளர்கள், பிரதம கணக்காளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் ஆகியோர் திணைக்களத்தின் அந்தந்தப் பிரிவுகளுக்குப் பொறுப்பாகச் செயற்படுகின்றனர். 2021 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் பணியாட் தொகுதி தொடர்பான விபரங்கள் வருமாறு:

**அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதி விபரம் (2021.12.31 ஆம் திகதிக்கு)**

| பதவி | சேவை | சேவை மட்டம் | அங்கீகரிக்கப் பட்ட பதவிகளின் எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| குடிவரவு, குடியகல்வு கட்டுப் பாட்டாளர் நாயகம் | இ.நி.சே. | சிரேஷ்ட மட்டம் | 1 | 1 | 0 |
| மேலதிக குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் | இ.நி.சே. | சிரேஷ்ட மட்டம் | 1 | 1 | 0 |
| குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் | இ.நி.சே. | சிரேஷ்ட மட்டம் | 5 | 5 | 0 |
| பிரதம கணக்காளர் | இ.க.சே. | சிரேஷ்ட மட்டம் | 1 | 1 | 0 |
| பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | இ.க.சே. | சிரேஷ்ட மட்டம் | 1 | 1 | 0 |
| குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர்(புலனாய்வு மற்றும் செயற்படுத்தல்) | திணைக்கள | சிரேஷ்ட மட்டம் | 1 | 0 | 1 |
| பிரதி/ உதவி குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் | இ.நி.சே. | சிரேஷ்ட மட்டம் | 40 | 36 | 4 |

| பதவி | சேவை | சேவை மட்டம் | அங்கீகரிக்கப் பட்ட பதவிகளின் எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| பிரதி/ உதவி குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் | திணைக்கள | சிரேஷ்ட மட்டம் | 15 | 7 | 8 |
| கணக்காளர் | இ.க.சே. | சிரேஷ்ட மட்டம் | 2 | 2 | 0 |
| நிருவாக உத்தியோகத்தர் | அ.மு.உ.சே. | மூன்றாம் மட்டம் | 2 | 2 | 0 |
| சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் (திணைக்கள) | திணைக்கள | மூன்றாம் மட்டம் | 65 | 26 | 39 |
| அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் (திணைக்கள) | திணைக்கள | மூன்றாம் மட்டம் | 458 | 387 | 71 |
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ், சிங்களம்/ ஆங்கிலம்) | மொழி.பெசே . | மூன்றாம் மட்டம் | 2 | 2 | 0 |
| பயிற்சி முகாமையாளர் | இணைந்த சேவை | இரண்டாம் மட்டம் | 1 | 1 | 0 |
| வரவு – செலவுத் திட்ட உதவியாளர் | இணைந்த சேவை | இரண்டாம் மட்டம் | 1 | 1 | 0 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | அபிவிருத்தி உ. சேவை | இரண்டாம் மட்டம் | 20 | 22 | மிகை 2 |
| கண்காணிப்பாளர் | திணைக்கள | இரண்டாம் மட்டம் | 3 | 1 | 2 |
| முகாமைத்துவச் சேவை உத்தியோகத்தர் | அ.மு.உ.சே.. | இரண்டாம் மட்டம் | 378 | 363 | 15 |
| வரவேற்பு உத்தியோகத்தர் | திணைக்கள | இரண்டாம் மட்டம் | 1 | 1 | 0 |
| கடவுச்சீட்டு உதவியாளர் | திணைக்கள | இரண்டாம் மட்டம் | 35 | 30 | 5 |
| செயற்பாட்டு உதவியாளர் | திணைக்கள | இரண்டாம் மட்டம் | 100 | 0 | 100 |
| சாரதி | சாரதி சேவை | ஆரம்ப மட்டம் | 31 | 31 | 0 |
| ஓய்வறை உதவியாளர் | திணைக்கள | ஆரம்ப மட்டம் | 6 | 0 | 6 |
| அலுவலக உதவியாளர் | அ.உ.சே. | ஆரம்ப மட்டம் | 112 | 97 | 15 |
| சிற்றூழியர் | அமய | ஆரம்ப மட்டம் | 10 | 9 | 1 |
| மொத்தம் | | | 1292 | 1016 | 276 ( மிகை 2) |

- கட்டுப்பாட்டாளர் பதவிகள் 5 பூரணப்படுத்தப்பட்டிருப்பதனால் இ.நி.சே. தரம் 1 உத்தியோகத்தர்கள்இருவர் 2 பிரதிக் கட்டுப்பாட்டாளர் பதவியில் கடமைப் புரிகின்றனர்.

## 6.2 நிறுவனத்தின் செயலாற்றுகையின் பொருட்டு மனித வளப் பற்றாக்குறை அல்லது மேலதிகம் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக.

திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை 1,292 ஆகும். 2021.12.31 ஆம் திகதிக்கு சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 1,016 ஆகும். இதற்கமைய, 2021 ஆம் ஆண்டில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை 276 ஆகும். இது ஒட்டுமொத்த பணியாட் தொகுதியில் 21.36% வீதமாகும். அதற்கமைய பணியில் ஈடுபடுத்தப்பட்ட பணியாட் தொகுதி 78.64% வீதம் ஆகும். இந்த வெற்றிடங்களில் இது வரையில் ஆட்சேர்ப்புச்செய்யாத புதிய பதவியான செயற்பாட்டு உதவியாளர் மற்றும் ஓய்வறை உதவியாளர் பதவிகள் 106 உம் உள்ளடங்கும். அதற்கிணங்க, காணப்பட்ட ஆளணிக்கு அமைய வெற்றிடங்களின் எண்ணிக்கை 170 ஆகும். கொவிட் 19 தொற்றுநோய் நிலமைக் காரணமாக காணப்பட்ட சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய சில காலம் ஆளணியை வரையறை செய்வதற்கு ஏற்பட்டது. அத்தோடு 2021 ஆம் ஆண்டில் சேவைப் பெறுநர்களின் வருகை ஓரளவுக்கு குறைந்த மட்டத்தில் இருந்த காரணத்தினால் ஏனைய ஆளணியினர் மூலம் வெற்றிடங்கள் நிலவிய பதவிகளின் கடமைகளை நிறைவேற்றிக்கொள்ள முடிந்தது. எனவே ஆளணிப் பற்றாக்குறை திணைக்களத்தின் செயலாற்றுகையில் தாக்கத்தை செலுத்தவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, 2021ஆம் ஆண்டில் கொவிட் 19 தொற்றுநோய் நிலமைக் காணப்பட்ட போதிலும் சேவைப் பெறுநர்களுக்கு தொடர்ச்சியாக சேவைகளை வழங்க இயலுமாகியது.

திணைக்களத்தில் நிலவும் இணைந்த சேவைகளைச் சேர்ந்த வெற்றிடங்களை (முகாமைத்துவ உதவியாளர்/ அலுவலக உதவியாளர்/ சாரதி முதலான பதவிகள்) வருடாந்த இடமாற்றங்கள் ஊடாக நிரப்பிக் கொள்ளக் உத்தேசிக்கப்பட்டுள்ளது. திணைக்களப் பதவிகளுள் குறிப்பிடத்தக்க வெற்றிடமாக 2019 ஆம் வருடத்தில் அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ள 100செயற்பாட்டு உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படாத வெற்றிடங்களாக குறிப்பிடலாம். விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வு நடவடிக்கைகளின் போது குறித்த செயற்படுத்தல் நடவடிக்கைகளை வினைத்திறனுடனும் சீராகவும் மேற்கொள்வதற்காக இந்த செயற்படுத்தல் உதவியாளர் பதவிகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியுடன் சேர்க்கப்பட்டுள்ளதுடன், இதற்காக 100 பேரை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அந்தப் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் திருத்தங்களுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு ஓய்வறை உதவியாளர் பதவிகள் 06 அனுமதிக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க பலநோக்கு அபிவிருத்திச் செயலணித் திணைக்களத்தினால் தற்போது அரசாங்க நிறுவனங்களின் ஆரம்பதர பதவிகளுக்கு சேவை அவசியத்தின் பேரில் பலநோக்கு அபிவிருத்தி உதவியாளர்களை ஓய்வறை உதவியாளர் பதவிக்கு நியமிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்காக பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளரிடம் தகவல் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் உரிய போட்டிப் பரீட்சைகளை நடாத்துவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நேர அட்டவணைக்கு அமைய திகதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆயினும் கொவிட் 19 தொற்றுநோய் நிலமைக் காரணமாக உரிய திகதியில் அந்தப் பரீடசை நடைப்பெறவில்லை. அதற்கமைய 2022 ஆம் ஆண்டில் பரீட்சைத் திணைக்களத்தினால் உரிய பரீட்சை துரிதமாக நடாத்தப்படும் பட்சத்தில் வெற்றிடங்களை பெரும்பாலும் 2022 ஆம் வருடத்தில் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த பிரதிக் கட்டுப்பாட்டாளர் (திணைக்கள) பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான அனுமதியைப் பெற்றுக்கொள்ள ஏற்புடைய தகவல்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

## 6.3 மனிதவள அபிவிருத்தி

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்சியளிக்கப் பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | காலப் பகுதி | மொத்த முதலீடு ( Rs '000 ) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு/ வெளிநாட்டு) | பிரதிபலன்/ பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டு | வெளிநாட்டு | | |
| பொருள் சுற்றாய்வுக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் அறிவூட்டல் | பொருள் சுற்றாய்வுக்காக பெயரிடப்பட்ட உத்தியோகத்தர்கள் | 01 நாள் | 4.85 | | உள்நாட்டு | பொருள் சுற்றாய்வுக்கு ஏற்புடைய வேலைப் படிமுறைகள் தொடர்பிலான அறிவை அதிகரித்தல் |
| முறையற்ற குடிப்பெயர்வு மற்றும் ஆட்கடத்தல் தொடர்பான குறுகியகால பாடநெறி | அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் 35 | 50 மணித்தியாலங்கள் | | | உள்நாட்டு | சர்வதேச ஆட்கடத்தல் வியாபாரம் தொடர்பில் சர்வதேச சட்டக் கட்டமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகள் பற்றிய அறிவை அதிகரித்தல் |
| தமிழ் மொழிப் பாடநெறி | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் 45 | 150 மணித்தியாலங்கள் | 450 | | உள்நாட்டு | அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்புடைய வகையில் உத்தியோகத்தர்களின் மொழியாற்றலை அதிகரித்தல் |
| குடிப்பெயர்வு முகாமைத்துவத்தின் இயலளவை வலுப்படுத்தும் செயலமர்வு | நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்கள் 20 | 2 நாட்கள் | | | உள்நாட்டு | பயணமேடை கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இணைந்த சேவை நிலையங்களின் சேவைகள் தொடர்பிலான அறிவு அதிகரித்தல் |
| கொள்முதல் செயன்முறைப் பற்றிய சான்றிதழ் பாடநெறி | நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்கள் 25 | 10 நாட்கள் | 500 | | உள்நாட்டு | விடய செயற்படுத்தலின் போது பின்பற்ற வேண்டிய சரியான படிமுறைகளை பின்பற்றுதல் |
| தொழிற் பயிற்சி பற்றிய பட்டப் பின் படிப்பு ஆங்கில டிப்ளோமா | நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்கள் 01 | 01 வருடம் | 98 | | உள்நாட்டு | நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர் என்ற ரீதியில் ஆங்கிலமொழியில் கடமைகளை நிறைவேற்ற முடியுமாதல் மற்றும் இராஜதந்திர ரீதியான கலந்துரை யாடல்களின் போது தொழில் தகைமையுடன் தோற்றுவதற்கு ஆர்வமெடுத்தல் |

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்சியளிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | காலப் பகுதி | மொத்த முதலீடு ( Rs '000 ) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு/ வெளிநாட்டு) | பிரதிபலன்/ பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டு | வெளிநாட்டு | | |
| வீசா நடைமுறையில் புதிய மாற்றங்கள் தொடர்பில் அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் | அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் 12 | 04 மணித்தியாலங்கள் | 0.98 | | உள்நாட்டு | வியடப் பாவனை உத்தியோகத்தர்கள் என்ற ரீதியில் புதிய நிலைமைகளை அடையாளம் கண்டு கடமைகளை மேற்கொள்ளல் |
| களனிப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் சமூக விஞ்ஞான முது கலைமாணிப் பாடநெறி (2020/2021) | நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்கள் 01 | 02 வருடங்கள் | 80 | | உள்நாட்டு | சேவை அவசியத்தை நிறைவேற்றி புதிய அறிவை கடமைகளை வினைத்திறனுடன் மேற்கொள்ளப் பயன்படுத்தல் |
| தலைமைத் துவப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (இணையவழி) | அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் 15 | 02 நாட்கள் | 2.04 | | உள்நாட்டு | தீர்மானம் எடுத்தல் மற்றும் ஆளுமை விருத்தி |
| ஊழியர் உள்வாங்கல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | இடமாற்றம்பெற்று வருகைத்தந்த புதிய உத்தியோகத்தர்கள் 70 | 10 நாட்கள் | 48.13 | | உள்நாட்டு | திணைக்களத்தின் மொத்தச் செயற்பாடுகளையும் சரளமாக அடையாளம் கண்டு பல்வேறுபட்ட நிறுவனங்களிலிருந்து இணைப்புச் செய்யப்பட்டவர்கள் திணைக்களத்தின் உப கலாசாரத்தை அடையாளம் காணல் |
| அரசாங்க உத்தியோகத்தர்களின் லீவுகள் தொடர்பிலான செயலமர்வு | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் 15 | 06 மணித்தியாலங்கள் | 3.95 | | உள்நாட்டு | விடயதானங்களை புரிந்து கடமைகளை நிறைவேற்ற இலகுவாதல் |
| ஆங்கில டிப்ளோமா பாடநெறி – பாலி மற்றும் பௌத்த பல்கலைக் கழகம் | அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் 03 | 01 வருடம் | 48.75 | | உள்நாட்டு | சர்வதேச ரீதியான தடைநீக்க செயற் பாடுகளின் போது மொழித் தேர்ச்சியை உயர் மட்டத்திற்கு கொண்டுவரல் |
| தமிழ் மொழிப் பாடநெறி 200 மணித்தியாலங்கள் | அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் 76 | 200மணித்தியாலங்கள் | 150 | | உள்நாட்டு | அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு உதவுதல் மற்றும் சேவை அவசியப் பாடுகளை நிறைவேற்றல் |

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்சியளிக்கப் பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | காலப் பகுதி | மொத்த முதலீடு ( Rs '000 ) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு/ வெளிநாட்டு | பிரதிபலன்/ பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டு | வெளிநாட்டு | | |
| சர்வதேச பாதுகாப்பு தொடர்பிலான பயிற்சி - UNCHR | அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் 20 | 02 நாட்கள் | | | உள்நாட்டு | சர்வதேச குடிப்பெயர்வின் போது முறையற்ற சேவைகள், சட்டவிரோதமாக நாட்டுக்குள் நுளையும் மற்றும் தங்கியிருக்கும் ஆட்களை கைதுசெய்து தடுத்து வைக்கும் போது சர்வதேச விவரக் குறிப்புக்களை அடையாளம் காணல் |
| கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தைப் பார்வையிடும் களச் சுற்றுலா | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் 90 | 02 நாட்கள் | 84.28 | | உள்நாட்டு | விமான நிலையம் ஊடாக நடைபெறும் பயணிகள் தடைநீக்க (நாட்டிற்குள் நுழையும் போதும் நாட்டிலிருந்து வெளியேறும் போதும்) செயன்முறையை புரிந்துகொள்ளல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகளை அடையாளம் காணல் |
| மத்தளை விமான நிலையத்தைப் பார்வையிடும் களச் சுற்றுலா | கடவுச்சீட்டு உதவியாளர் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் 27 | 01 நாள் | 27.84 | | உள்நாட்டு | விமான நிலையம் ஊடாக நடைபெறும் பயணிகள் தடைநீக்க (நாட்டிற்குள் நுழையும் போதும் நாட்டிலிருந்து வெளியேறும் போதும்) செயன்முறையை புரிந்துகொள்ளல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகளை அடையாளம் காணல் |
| ஆட்கடத்தல் வியாபாரம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி முறையற்ற குடிப்பெயர்வு தொடர்பான குறுகியகால பாடநெறி - OUSL ( 2021/2022 ) | அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் 41 | 05 மாதங்கள் | 420 | | உள்நாட்டு | சர்வதேச ஆட்கடத்தல் வியாபாரம் தொடர்பில் சர்வதேச சட்டக் கட்டமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகள் பற்றிய அறிவை அதிகரித்தல் |

| நிகழ்ச்சித்திட்டத் தின் பெயர் | பயிற்சியளிக்கப் பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | காலப் பகுதி | மொத்த முதலீடு ( Rs '000 ) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு/ வெளிநாட்டு | பிரதிபலன்/ பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டு | வெளிநாட்டு | | |
| ஆங்கில மொழிப் பாடநெறி – கொழும்புப் பல்கலைக்கழகம் | அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் 01 | 01 வருடம் | | | உள்நாட்டு | சர்வதேச ரீதியான தடைநீக்க செயற் பாடுகளின் போது மொழித் தேர்ச்சியை உயர் மட்டத்திற்கு கொண்டுவரல் |
| ஆட்கடத்தல் வியாபாரம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி முறையற்ற குடிப்பெயர்வு தொடர்பான குறுகியகால பாடநெறி- OUSL ( 2021/2022 ) | அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் 35 | 02 நாட்கள் | | | உள்நாட்டு | சர்வதேச ஆட்கடத்தல் வியாபாரம் தொடர்பில் சர்வதேச சட்டக் கட்டமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகள் பற்றிய அறிவை அதிகரித்தல் |
| ஆங்கிலமொழிப் பாடநெறி அவுஸ்திரேலியா உயர்ஸ்தானிகர் ஆலயம் (குழு03) | அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் - 43 | 50 மணித்தி யாலங்கள் | | | உள்நாட்டு | ஆங்கில மொழிப் பிரயோக ஆற்றலை (எழுத்து மற்றும் பேச்சு) அதிகரித்தல் |
| ஆவணப் பரிசோதனை மற்றும் முகங்களை அடையாளம் காணும் பயிற்சி - அவுஸ்திரேலியா உயர்ஸ்தானிகர் ஆலயம் | அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் 32 | 03 நாடகள் | | | உள்நாட்டு | கடவுச்சீட்டு, வீசாப் பத்திரம் உள்ளிட்ட விடயங்களுக்குத் தேவையான உதவி ஆவணங்களின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளும் ஆற்றலை அதிகரித்தல் |
| குற்றவியல் சட்டத்திற்கு அமைய ஆட்கடத்தல் வியாபாரம் மற்றும் திருட்டுத்தனமாக குடிப்பெயர்பவர் கள் மற்றும் குற்றவாளிகளை அடையாளம் காணல் | அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் 36 | 01 நாள் | | | உள்நாட்டு | குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் ஆட்கடத்தலில் ஈடுபடுபவர்களை அடையாளம் காணல் மற்றும் அதற்காக எடுக்க முடியுமான சட்ட நடவடிக்கைகள் குறித்து அறிதல் |

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்சியளிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | காலப் பகுதி | மொத்த முதலீடு ( Rs ‘000 ) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு/ வெளிநாட்டு | பிரதிபலன்/ பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டு | வெளிநாட்டு | | |
| செயலாற்றுகை சுட்டிகள் (KPI) தொடர்பில் மீளாய்வு செயலமர்வு | திணைக்கள உத்தியோகத்தர்கள் - 55 | 01 நாள் | 288.4 | | உள்நாட்டு | நிறுவனத்தின் நோக்கங்களை உரிய முறையில் அடையாளம் கண்டு அவற்றை அடைந்துகொள்வதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தல் மற்றும் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு சரியான அளவீட்டு நியமங்களைத் தயாரித்தல் |
| தேசிய தொழிற் கல்வி நிறுவனத்தின் மூலம் நடாத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பளம் தயாரித்தல் பற்றிய செயலமர்வு | திணைக்கள உத்தியோகத்தர்கள் - 06 | 01 நாள் | 24 | | உள்நாட்டு | அரசாங்க உத்தியோகத்தர்களின் மாதாந்த / வருடாந்த சம்பளங்களை சரியாக கணித்து வினைத்திறனுடன் செயலாற்றத் தேவையான அறிவை மேம்படுத்தல் |

- **நிறுவனத்தின் செயலாற்றுகையின் பொருட்டு பயிற்சி நிகழ்ச்சிகள் எவ்வாறு பங்களிப்புச் செலுத்துகின்றன என்பதை சுருக்கமாக விளக்குக.**
- நிறுவனத்தினால் அடையப்பெற்ற வெற்றிகள் மற்றும் வெற்றிகரமான செயலாற்றுகை மட்டமொன்றைத் தொடர்ந்தும் பேணிவருவதற்காக நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பயிற்சி மற்றும் அபிவிருத்தி செயன்முறை பெரிதும் உறுதுணையாக அமைந்தது.
- திணைக்களத்திற்கு இடமாற்ற அடிப்படையில் அல்லது ஆட்சேர்ப்பின் பேரில் இணையும் புதிய ஆளணி உறுப்பினர்களுக்கு திணைக்களப் பணிகள் தொடர்பில் வழங்கப்படும் முறையான பயிற்சியின் பின்னர் உத்தியோகத்தர் திணைக்களத்தில் பணியாற்றும் காலப் பகுதியில் அவர்களுக்குத் தேவையான அறிவை இற்றைப்படுத்திக்கொள்வதற்கு தொடர்ச்சியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப் படுகின்றது.
- தேவைக்கேற்ப இற்றைப்படுத்தப்படும் முறையான பயிற்சித் திட்டமொன்றின் மூலம் புதிய உலகளாவிய போக்குகளுக்கு ஈடுகொடுத்து முன்னோக்கிச் செல்லும் திணைக்களமாக அதன் உத்தியோகத்தர்களின் அறிவு வளர்ச்சியில் எப்போதும் கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது.
- பயிற்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக வருடாந்தம் ஒதுக்கப்படுகின்ற நிதி ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக, வெளி நிறுவனங்கள், தூதரகங்கள், சர்வதேச அமைப்புகள் ஆகியவற்றின் அனுசரணையுடன் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புகளை இனங்கண்டு,அதற்கான சந்தர்ப்பங்களை உத்தியோகத்தர்களுக்கு வழங்கி அவர்களது அறிவு, எண்ணப்பாடுகள் மற்றும் ஆற்றல்களை அபிவிருத்தி செய்வதற்கு நிதமும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதன் பெறுபேறாக திணைக்களத்தின் பொருளாதார செயலாற்றுகையை தொடர்ச்சியாகப் பேணிவருவதற்கு சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

2021 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மேலுள்ள அட்டவணையில் தொகுத்து குறிப்பிடப்பட்டுள்ளது.





# அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை ( இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்ற நிலமையை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| 1 | பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது | | |
| 1.2 | அரச அலுவலர்கள் முற்பணக்கணக்கு | இணக்கமானது | | |
| 1.3 | வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்) | - ஏற்புடையதன்று | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | - ஏற்புடையதன்று | | |
| 1.5 | சிறப்பு முற்பணக் கணக்கு | - ஏற்புடையதன்று | | |
| 1.6 | ஏனைய | - | | |
| 2 | புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445) | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS ) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 2.7 | பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை ( இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றநிலமையை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| 2.9 | இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 2.10 | பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 2.11 | அடிக்கட்டை புத்தகங்களின் (GA – N20 ) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 03 | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன. | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது. | இணக்கமானது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல.171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. | இணக்கமானது | | |
| 4 | **வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல். | இணக்கமானது | | |
| 4.2 | வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல். | இணக்கமானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல். | இணக்கமானது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை ( இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றநிலமையை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 5 | கணக்காய்வு வினாக்கள் | | | |
| 5.1 | அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 6 | உள்ளகக் கணக்காய்வு | | | |
| 6.1 | நி. பி.(2) 134 டி.எம்.ஏ / 1-2019 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல். | இணக்கமானது | | |
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல். | இணக்கமற்றது | கணக்காய்வு அறிக்கைளுக்கான விளக்கம் தாமதம் அடைதல். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கு அறிவித்தல் |
| 6.3 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன்19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 6.4 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதிப்பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல். | இணக்கமானது | | |
| 7 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு | | | |
| 7.1 | டிஎம்ஏ1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. | இணக்கமற்றது | முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் அறிவுரைக்கு அமைய | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை ( இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றநிலமையை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| 8 | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| 8.1 | ஆதனமுகாமைத்துவ சுற்றறிக்கை இல.01/2017, சொத்துபெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். | **இணக்கமானது** | | |
| 8.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும் அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். | **இணக்கமானது** | | |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கை இல.05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | **இணக்கமானது** | . | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. | **இணக்கமானது** | | |
| 8.5 | நி.பி 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது. | **இணக்கமானது** | | |
| 9 | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல். | **இணக்கமானது** | | |
| 9.2 | கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு 06 மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும். | **இணக்கமானது** | | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை ( இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றநில மையை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| 9.3 | வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நட வடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |
| 9.5 | 2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.2016/30 இன் பந்தி3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல். | இணக்கமானது | | |
| 9.6 | குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும். | இணக்கமானது | | |
| **10** | **வங்கி கணக்குகளின் முகாமை** | | | |
| 10.1 | உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 10.2 | மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளைத் தீர்த்தல். | இணக்கமானது | | |
| 10.3 | வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல். | இணக்கமானது | | |
| **11** | **நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்** | | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல். | இணக்கமானது | | |
| 11.2 | நி.பி. (1) 94 இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாதபொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும். | இணக்கமற்றது | கொரோனா நிலமைக் காரணமாக சிலசெலவினத் தலைப்புக்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் பற்றாக்குறை நிலவியமை | மேலதிக நிதி ஒதுக்கீடு தேவைப்படும் போது அதனை குறிப்பிட்ட ஆண்டிலேயே சமர்ப்பிக்குமாறு பிரிவுகளை அறிவூட்டல் |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை ( இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றநில மையை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| 12 | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல். | இணக்கமானது | | |
| 12.2 | நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல். | இணக்கமானது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல். | இணக்கமற்றது | பணித் தடைக்கு உட்பட்ட உத்தியோகத்தர்கள் மூவர் இருத்தல் மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரின் தனிப்பட்ட கோவை தயாரித்து முடிக்காமை | அறவிட்டுக்கொள் வதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| 13 | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | இணக்கமானது | | |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 14 | **முன்பணக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 14.2 | நி.பி.371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும். | இணக்கமானது | | |
| 14.3 | நி.பி.371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல். | இணக்கமானது | | |
| 14.4 | மாதந்தோறும் திறைசேரி புத்தகங் களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை ( இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றநிலமையை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| 15 | **வருமான கணக்கு** | | | |
| 15.1 | விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும். | இணக்கமானது | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம்வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும். | இணக்கமானது | | |
| 15.3 | நி.பி176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 16 | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 16.2 | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல். | இணக்கமானது | | |
| 16.3 | 20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல.04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 17 | **பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல். | இணக்கமானது | | |
| 17.2 | அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள் / குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல். | இணக்கமானது | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை ( இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றநிலைமையை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைக |
|---|---|---|---|---|
| 18 | பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல் | | | |
| 18.1 | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல.05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல். | இணக்கமானது | | |
| 18.2 | சுற்றறிக்கையின் பந்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது. | இணக்கமானது | | |
| 19 | மனித வள திட்டத்தினைத் தயாரித்தல் | | | |
| 19.1 | 2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.02/2018 இன் இணைப்பு 02படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல். | இணக்கமானது | | |
| 19.2 | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணி நேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும். | இணக்கமானது | | |
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 ஆவது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல். | இணக்கமானது | | |
| 20 | கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள் | | | |
| 20.1 | முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல் | இணக்கமானது | | |